மாலை 46 மணி 8 ஆகஸ்ட் 2004 விலை ரூ.10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு







## திட்டைக்கு வருக! குருவருள் பெறுக!

குருபெயர்ச்சி – சிறப்புக் கட்டுரை

## பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் சங்கு தீர்த்தப் புஷ்கர மேளா! இலட்சத்தீபப் பெருவிழா!

## பூ இல்லை, காய்காய்க்கும் இலை உண்டால் நோய் தீரும்


- அதிசய தலமரம்

## மாம்பழச்சாறு அபிசேகம்! அருந்தஉண்டு வெகுசேமம்!!

# அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில்

திருவான்மியூர், சென்னை41.







## மகா கும்பாபிஷேக விழா அழைப்பிதழ்

இத்திருக்கோயிலில் திருப்பணி வேலைகள் அனைத்தும் உபயதாரர்கள் மூலம் செய்விக்கப்பெற்று நிகழும் ஸ்ரீ தாரண வருடம் ஆவணி மாதம் 6-ஆம் தேதி 22.8.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 7.02 மணிக்கு மேல் 7.50 மணிக்குள் சுவாதி நட்சத்திரம் சுக்கிர ஹோரை சிம்ம லக்னத்தில் இராஜகோபுர, விமான புனராவர்த்தன, ஜீர்ணோத்தாரண, அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெறும்.

**செய்யப்பட்டுள்ள திருப்பணி வேலைகள் விவரம் :**

**சீரமைப்புப் பணிகள் :**

கிழக்கு இராஜகோபுரம், மேற்கு இராஜகோபுரம், சுவாமி, அம்பாள், விநாயகர், முருகர், தியாகர், சந்நிதி விமானங்கள் பழுதுபார்த்துப் பஞ்சவர்ணம் தீட்டப்பெற்றுள்ளது. மடைப்பள்ளி, கோசாலை, அலங்கார மண்டபங்கள், வன்னிமர மேடை போன்ற மராமத்துப் பணிகள் செய்விக்கப்பெற்றுள்ளன.

**புதிய திருப்பணிகள் :**

வாகன மண்டபம், அபிஷேகத் தீர்த்தத்தொட்டி, அருள்மிகு இராமநாதீஸ்வரர் விமானம், பிரகார சிமெண்ட் பாதை சீரமைப்பு போன்ற புதிய கட்டுமானப் பணிகளும், சுக்கிரவார அம்மன் சந்நிதி, பள்ளியறையில் நூதன கண்ணாடி வேலைகள், சுவாமி, அம்பாள், தியாகர் மண்டபக்கருங்கல் தூண்கள், சுவர்கள் சுத்தம் செய்யப்பெற்று ஸ்டோன் பாலிஷ் செய்யப்பெற்றுள்ளமை. அன்னதானக் கூட விரிவு, டிக்கட் கவுண்டர் அமைத்தல், பிரசாத விநியோக கவுண்டர், ஸ்டோர் ரூம், பூஜை சாமான்கள் கடைகள், திருக்கோயில் முழுவதும் புதிதாக மின் ஒயரிங் செய்தல் ஆகிய புதிய திருப்பணிகளும் செய்யப்பெற்றுள்ளன.

**திருப்பணி மற்றும் கும்பாபிஷேக உபயம் :**

திருப்பணி உபயதாரர்கள், மற்றும் வெள்ளிக்கிழமை விழாக் குழு

மகா கும்பாபிஷேக விழாவில் அனைவரும் கலந்துகொண்டு எல்லாம் வல்ல அருள்மிகு திரிபுரசுந்தரி அம்பாள் உடனுறை அருள்மிகு மருந்தீஸ்வரர் திருவருள் பெற்றுய்ய வேண்டுகிறோம்.

**ப. ராஜா** B.Sc.,B.L.
இணை ஆணையர்

**எஸ்.பாரதி**
செயல் அலுவலர்

**த.காவேரி** B.A.,B.L.
தக்கார் / உதவி ஆணையர்

விளம்பர உதவி :
DINITROL, ANAND MANOHAR, **OM SHAKTHI ENTERPRISES**
New No.18(old No.68), Anna Street, Thiruvanmiyur, Chennai-41.




திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2035 தாரண – ஆவணி

மாலை–46 மணி –8 ஆகஸ்ட் 2004


# அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

ஆண்டாள் திருஅவதாரம் புரிந்த **"ஆடிப்பூரம்"** அனைத்து வைணவ ஆலயங்களிலும் மகிழ்ந்து கொண்டாடப்படும் திருநாள். அந்நாள்வரும் மங்கல மாதம் இம்மாதம்.

**"இன்றோ திருஆடிப் பூரம் எமக்காக**
**அன்றோ இங்காண்டாள் அவதரித்தாள் - குன்றாத**
**வாழ்வான வைகுந்தவான் போகந்தன்னை இகழ்ந்து**
**ஆழ்வார் திருமக ளாராய்"**

என்று **"உபதேச இரத்தினமாலை"** கொண்டாடும் ஆண்டாள் அவதாரவிழா ஸ்ரீவில்லிப்புத்தூரில் 21.07.04 அன்று வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது. இதனை விவரிக்கும் கட்டுரை இந்த இதழின் ஒரு சிறப்பம்சமாகும்.

திருவாரூர்ப் பெருமான் அடி எடுத்துக் கொடுக்க **"திருத்தொண்டத்தொகை"** பாடி இவ்வையத்தை வாழ்வித்த அருளாளர் பெருமான் சுந்தரமூர்த்தி நாயனார். அவர்தம் குருபூசைத் திருநாளாம் **"ஆடி சுவாதித்"** திருநாளும் அனைத்துச் சிவாலயங்களிலும் 25.07.04 அன்று கொண்டாடப்படுகின்றது. **"சுந்தரர் ஆற்றிய அற்புதங்கள்"** நீங்கள் படித்து இன்புற வேண்டிய கட்டுரை.

**"மெய்கண்ட தெய்வம்"** என யாவரும் ஏத்தி மகிழும் முருகப் பெருமானைப் போற்றி வளர்த்தவர்கள் கிருத்திகை மாதர்கள். இம்மாதரை முருகன் அடியார்கள் மகிழ்வுடன் கொண்டாடும் திருவிழா **"ஆடிக் கிருத்திகை"** விழா. ஆடிக் கிருத்திகையில் முருகப் பெருமானை வழிபட்டால் அடியார்கள் அளவிறந்த வரங்கள் பெறலாம்.

**"ஆறுமுகம் வழிபட்டால் ஏறுமுகம்"**

**"ஆறுமுகம் வழிபட்டால் ஏது பயம்?** - பக்திச் சுவை மிக்க பயன்மிகு கட்டுரைகள்.

"ஆடிப்பட்டம் தேடி விதை" என்பது பழமொழி. ஆடியில் மழைபொழிந்து அவனியைக் காக்கும் அம்மன் மாரி அம்மன். அருள் மாரியைக் கொண்டாடும் **"எங்க முத்துமாரி"** - எல்லோரும் மகிழ்ந்து போற்ற வேண்டிய கட்டுரை.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வேதகிரியாம் திருக்கழுக்குன்றத்தில் நடைபெறும் **"சங்குதீர்த்தப் புஷ்கரமேளா - இலட்சத்தீபப் பெருவிழா"** - படித்துப் பயன் பெற வேண்டிய கட்டுரையும் இவ்விதழின் சிறப்பு அம்சமாகும்.

குருபெயர்ச்சி - பரிகாரம் கூறும் **"திட்டைக்கு வருக! குருவருள் பெறுக"** - அனைவரும் அவசியம் படிக்க வேண்டிய கட்டுரை.

இவற்றுடன் மகாபாரதம், திருவிளையாடல் புராணம் - தொடர்கள், சுவையான கேள்வி - பதில்கள், நீதிக்கதைகள், ஏராளமான துணுக்குகள் வழக்கம்போல் இவ்விதழைச் சிறப்பிக்கின்றன.

இத்தனைக்கும் சிகரம்வைத்தாற்போல் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் அறநிலையத்துறை மானியக் கோரிக்கையின் போது ஆற்றிய பதிலுரையும் இவ்விதழின் சிறப்பம்சமாகும்.

புதுப்பொலிவுடன் வலம்வரும் "திருக்கோயில்" இதழுக்கு வாசகர்களும், விளம்பரங்கள் வாயிலாக வணிக நிறுவனங்களும் அளித்துவரும் அமோக ஆதரவு **"ஆடிப் பெருக்கினைப்"** போல் பெருகிவரக் கண்டு என் உள்ளம் பூரிக்கின்றது.


அனைவரும் நல்லாதரவினைத் தொடர்ந்து நல்கிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**அன்புடன்,**

**[ஜி.இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.,]**

**ஆணையர், இந்து சமயஅறநிலைய ஆட்சித்துறை**

# திருக்கோவில்களின் அன்னதானத் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 6 மாதச் சம்பளம் நன்கொடை



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2002 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முதல் தமது சம்பளத்தைத் திருக்கோயில்களில் செயற்படுத்தப்பட்டு வரும் அன்னதானத் திட்டத்திற்காக ஒவ்வொரு மாதமும் ஒரு திருக் கோவிலுக்கு என வழங்கி வருகிறார்கள்.

2003 ஆம் ஆண்டின் நவம்பர் மாதச் சம்பளத் தொகை ரூ. பத்தாயிரத்தைச் சென்னை திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமித் திருக் கோயிலுக்கு வழங்கினார்கள்.

2003 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதச் சம்பளத்தைச் சென்னை நுங்கம்பாக்கம் அருள்மிகு அகத்தீசுவரர் வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலுக்கும், 2004 ஆம் ஆண்டின் ஜனவரி மாதச் சம்பளத்தைத் திருச்சி மாவட்டம் சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கும், பிப்ரவரி மாதச் சம்பளத்தை தஞ்சை மாவட்டம் புன்னைநல்லூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கும், மார்ச்சுமாதச் சம்பளத்தை நாகை மாவட்டம் வைத்தீஸ்வரன் கோயில் அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயிலுக்கும், ஏப்ரல் மாதச் சம்பளத்தை பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமித் திருக் கோயிலுக்கும் அன்னதானத் திட்டத்திற்கென வழங்கினார்கள்.



**திருத்தேர்களைப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் :**

திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 823 மரத்தேர்கள் உள்ளன. அவற்றில் 147 திருத்தேர்கள் பழுதுபார்க்கப்பட வேண்டியுள்ளது. அவற்றைப் பேணிப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருத்தேர்களை பாதுகாக்கும் பொருட்டு தீப்பிடிக்காத தகடுகளால் கூரை, இரும்பு அச்சு மற்றும் சக்கரம், பழுதுபார்த்து பராமரிப்பு ஏற்பாடுகள் செய்யவும், திருத்தேர்களின் மதிப்பிற்குரிய காப்பீடுகள் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திருத்தேர் திருப்பணிகளில் பொதுமக்கள் பங்கேற்கச் செய்யும் வகையில் பொதுமக்கள் நன்கொடை மற்றும் உபயம் மூலம் திருத்தேர் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. 2002-2003ம் ஆண்டில் 33 திருக்கோயில்களின் திருத்தேர்கள் பழுது நீக்கப்பட்டு திருத்தேர் திருவிழா நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2003-04 (பிப்ரவரி 2004 முடிய) இதுவரை 60 திருக்கோயில்களில் திருத்தேர்கள் பழுது

# அறநிலையத் துறை ஆற்றிவரும் அறப்பணிகள்


- திருமிகு ஜி. இராமகிருஷ்ணன் இ.ஆ.ப.
ஆணையாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை


**திருக்குளங்களின்பாதுகாப்பு :**

1. திருக்குளங்களில் உள்ளும் புறமும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்
2. திருக்குளங்களைச் சுற்றி வேலி அல்லது சுற்றுச்சுவர் கட்டுதல்
3. தூர் எடுத்தல்
4. திருக்குளங்களுக்கு மழைநீர் வருவதற்கு வழி ஏற்படுத்தி மழை நீர் சேகரித்தல்.
5. திருக்குளங்களில் உள்ள படிகளைப் பழுது பார்த்தல்.

2003-2004ம் ஆண்டு 757 திருக்குளங்கள் பழுது பார்க்கப்பட்டது. மேலும் இதர திருக்குளங்களைப் பழுது பார்க்கவும் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



நீக்கப்பட்டு தேர்த்திருவிழா நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பில் 10 திருக்கோயில்களின் திருத்தேர்கள் பழுது பார்க்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதில் 2 திருத்தேர் திருப்பணி முடிந்து, மற்ற 7 திருக்கோயில்களில் பணி நடைபெற்று வருகிறது. எஞ்சியுள்ள 1 திருக்கோயில் திருத்தேர்த் திருப்பணிக்கு உபயதாரர் மூலம் பணிதுவங்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணி துவங்கப்படவுள்ளது.

**பக்தர்களுக்கு வசதிகள் :**

***அ) திருக்கோயில்களில் குடிநீர் வசதி:***

திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்கள் அனைவருக்கும் திருக்கோயில்களில் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேவையான இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 1.4.2003 முதல் 29.02.2004 முடிய இத்திட்டத்தின்கீழ் 2091 திருக்கோயில்களில் இவ்வசதி செய்யப்பட்டுள்ளது.

**ஆ) கழிப்பிட வசதி :**

திருக்கோயில்களுக்கு வரும் சேவார்த்திகள் பயன்படுத்தும் வண்ணம் நவீன கழிப்பிட வசதிகள் ஆண்கள், பெண்களுக்கெனத் தனித்தனியாக செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி 272 திருக்கோயில்களில் இவ்வசதி செய்யப்பட்டுள்ளது.

**இ) குடில்கள், அறைகள், பொருள் பாதுகாப்பு அறை வசதிகள் :**

திருக்கோயில்களுக்கு வரும் சேவார்த்திகளின் தேவைக்கேற்ப போதிய அளவில் தங்குவதற்குத் தேவையான குடில்கள், அறைகள் மற்றும் பொருள் பாதுகாப்பு அறைகள் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிட வசதிகள் செய்துதர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**ஒரு காலப் பூஜைத் திட்டம் :**

ஒரு காலப் பூஜை, முறையாக நடத்திட இயலாத நிதிவசதியற்ற திருக்கோயில்களுக்கு ஒரு காலப் பூஜையினை முறைப்படி நடத்திடப் இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் பொதுமக்களை ஈடுபடுத்தும் நோக்கில் பொதுமக்கள் நன்கொடையாக ரூ. 2500/- ஒரு திருக்கோயிலுக்கு அளித்தால், நிதிவசதியுள்ள திருக்கோயில்களின் உபரிநிதியிலிருந்து ரூ. 20,000/-ம், திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதியிலிருந்து ரூ.1,300-ம், ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 1,200/-ம் வழங்கி அத்திருக்கோயிலின் பெயரில் ரூ.25,000/- நிரந்தர முதலீடு செய்யப்படும். அம் முதலீட்டிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து நாள்தோறும் ஒரு காலப் பூஜை நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி டிசம்பர் 2003 வரை 9792 திருக்கோயில்கள் பயனடைந்து வருகின்றன. ஒரு காலப் பூஜை நடத்த இயலாமல் உள்ள திருக்கோயில்கள் கண்டறியப்பட்டு அத்தகைய அனைத்துத்




ஸ்ரீவில்லிப்புத்தூர் திருத்தேர் தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய தேராகும். இத்தேர் 150 டன் எடையும், 65 அடி உயரமும் கொண்டது. ஆடிப்பூர விழாவில் இத்தேர் உலா வரும்.

திருக்கோயில்களிலும் ஒரு காலப் பூஜை நடத்தப்பட வேண்டும் என இவ்வரசு முடிவு செய்துள்ளது. *2003-2004*ம் ஆண்டு இத் திட்டத்தின்கீழ் *90* திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன.

உலோகத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்தவைகள் பாதுகாப்பு :

1. திருக்கோயில்களில் திருட்டு நடைபெறாமல் தடுக்கும் வண்ணம் இயன்ற அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் அரசு எடுத்துள்ளது. திருக்கோயில்களில் கள்வர் எச்சரிக்கை மணிகள், கோள்சொல்லிக் கடிகாரம், தொட்டிப் பூட்டுகள், இரும்புக் கதவுகள் நிறுவுதல், இரவுக் காவலர்கள் நியமனம், முன்னாள் இராணுவவீரர் மற்றும் இரண்டாம் நிலை காவலர்களைத் திருக்கோயில் பாதுகாப்புப்படை மூலம் நியமித்தல், உலோகத் திருமேனி மையங்கள் ஏற்படுத்துதல், கிராமப்புற விழிப்புக்குழு ஏற்படுத்துதல் போன்ற முன்னேற்பாடுகள் மூலம் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உள்ளூர் காவல்துறை மற்றும் சிலைகள் பாதுகாப்புப் பிரிவினர் திருக்கோயில்களில் நிகழும் களவுகளைக் கண்டறியும் பொறுப்பில் உள்ளனர். இத்துறை கீழ்க்கண்ட இடங்களில் உலோகத் திருமேனி பாதுகாப்பு மையங்கள் ஏற்படுத்திப் பேணி வருகின்றன.

1. திருவாரூர் சிலைகள் பாதுகாப்பு மையம் (அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் வளாகம்) திருவாரூர்.
2. அருள்மிகு அகிலாண்டேஸ்வரி உடனுறை ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி.
3. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.
4. அருள்மிகு காந்திமதி உடனுறை நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி.
5. அருள்மிகு சுகவனேசுவரர் திருக்கோயில், சேலம்.

உலோகத் திருமேனிகளின் பாதுகாப்பு மையங்களில் *3188* உலோகத் திருமேனிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர், கும்பகோணம் மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் பாதுகாப்பு மையங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


திருக்கோயில் பாதுகாப்புப் படை :

மாநிலம் முழுவதுமுள்ள திருக்கோயில்களிலுள்ள உலோகத் திருமேனிகள், நகைகள், உண்டியல்கள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களின் பாதுகாப்பிற்காக திருக்கோயில் பாதுகாப்புப்படை ஏற்படுத்தப்பட்டது. இதில் *1000* இரண்டாம் நிலைக் காவலர்கள் மற்றும் *3000* முன்னாள் இராணுவத்தினரை நியமனம் செய்ய அனுமதிக்கப்பட்டது. காவல் துறையினரால் *1000* இரண்டாம் நிலைக் காவலர்களும், *2778* முன்னாள் இராணுவத்தினர்களும் நியமனம் செய்யப்பட்டு அவர்கள் உள்ளூர் காவல் நிலையத்துடன் இணைக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இதுவரையிலும் *2751* திருக்கோயில்களில் பாதுகாப்புப் படையினர் பணியில் உள்ளனர்.

தொடரும்..


திருக்கோயில்

திங்கள் இதழ்



சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| தனி இதழின் விலை | - ரூ | 10/- |
| ஓராண்டுச் சந்தா | - ரூ | 120/- |
| பத்து ஆண்டுச் சந்தா | - ரூ | 1000/- |
| ஆயுட்காலச் சந்தா | - ரூ | 1500/- |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

விளம்பரக் கட்டண விவரம்


| | | |
|---|---|---|
| 1. | பின் பக்க அட்டை (வண்ணத்தில்) | ரூ. 25,000/- |
| 2. | முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ. 12,000/- |
| 3. | பின் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ. 10,000/- |
| 4. | உள்புறம் முழுப்பக்கம் | ரூ. 5,000/- |
| 5. | உள்புறம் அரைப்பக்கம் | ரூ. 3,000/- |

இதற்கான பண விடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை-34 என்ற முகவரிக்கு அனுப்பவும்.




## எறும்புகள் வழிபட்ட திருத்தலம்

திருவெறும்பியூர் அருள்மிகு எறும்பீஸ்வரர் ஆலயம் ஆகும். இது காவிரித் தென் கரைத்தலம் ஆகும்.



# திட்டைக்கு வருக! திருவருள் பெறுக!!

டி. கோவிந்தராஜீ

தேவாரம்

நாரணன் தன்னொடு நான்முகன் தானுமாய்
காரணன் அடிமுடி காண ஒன்னானிடம்
ஆரணங்கொண்டு பூசுரர்கள் வந்தடிதொழ
சீரணங்கும் புகழ்த் தென்குடித் திட்டையே.
-திருஞானசம்பந்தர்

"மூர்த்தி, தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு ஓர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்பது தாயுமானவர் வாக்கு. இப்படி மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றிலும் சிறந்தது தென்குடித் திட்டை.


### தல அமைவிடம்

தஞ்சாவூரில் இருந்து திருக்கருகாவூர் செல்லும் வழியில் பத்தாவது கிலோ மீட்டரில் தற்போது திட்டை என அழைக்கப்படும் தென்குடித்திட்டை கிராமத்தில் அருள்மிகு வசிஷ்டேஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது.

### அருள்மிகு வசிஷ்டேஸ்வரர் (மூர்த்தி)

ஆதிப்பிரளய காலத்தில் இவ்வுலகம் முழுவதும் நீரால் சூழப்பட்டது. மும்மூர்த்திகளும் மாயை வசப்பட்டு நீர் சூழ்ந்தும், இருள் கவிந்தும் இருந்த பிரம்மாண்ட உலகத்தைக் கண்டு அஞ்சினர். பரம்பொருளைப் பலவாறு துதித்தனர். பார்வதி பரமேஸ்வரனின் அருளால் ஊழிப் பெரு வெள்ளத்தின் நடுவில் பத்து மைல் பரப்பளவுள்ள மேட்டுப் பகுதியைக் கண்டு வியந்தனர். அம்மேட்டுப்பகுதியில் ஜோதிமயமான லிங்கத்தைக் கண்டு பூஜித்தனர்.

இந்த லிங்கத்தினின்று காட்சி தந்த இறைவன் மும்மூர்த்திகளிடம் ஏற்பட்ட மயக்கத்தை அகற்றி அபயமளித்து அவர்களுக்குப் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் அதற்கான வேத, வேதாந்த, சாஸ்திர அறிவினையும் அருளினார். இறைவன் சுயம்புவாக தோன்றியதால் ஸ்வயம்பூதேஸ்வரர் (தான்தோன்றீஸ்வரர்) என அழைக்கப்பட்டார். வசிட்டர் இங்கு வந்து தவம் புரிந்து ஞானிகளுள் தலை சிறந்தவர் ஆனார். அதனால் இத்தல இறைவன் வசிஷ்டேஸ்வரர் என அழைக்கப்பட்டார்.





குருபகவானைவெளிநாட்டவரும் வந்து வணங்குதல்

### அழியாத் தலம்

ஆதி கல்ப காலத்தில் இறைவனால் படைக்கப்பட்ட பல தலங்கள் பிரளயத்தில் மூழ்கிப் பின் தோன்றின. பிரளய காலத்திலும், பேரூழிக் காலத்திலும் அழியாத பெருமை உடையது திட்டைத் தலம், கைலாசம், கேதாரம், காசி, ஸ்ரீசைலம், காஞ்சி, சிதம்பரம் போன்ற சுயம்புத் தலங்களின் வரிசையில் இருபத்தி இரண்டாவது சுயம்புத் தலமாக விளங்குவது தென்குடித் திட்டை.

திட்டை என்ற சொல்லுக்கு திட்டு அல்லது மேடு என்பது பொருளாகும். தென்குடி என்பது மனித உடல், திட்டை என்பது ஞானமேடு. மனித உடலில் மூலாதாரம் முதல் ஆக்ஞை உள்ளிட்ட ஆறு ஆதாரங்கள் உள்ளன. இந்த இனிய ஆறு ஆதாரங்கள் பொருந்திய உடலில் முதலில் இறையைப் பற்றிய ஐய உணர்வு தோன்றுகிறது. ஐயம் தெளிந்த பின்மெய்யுணர்வு தோன்றுகிறது. மெய்யுணர்வு தோன்றிய பின் சந்தேகத்திற்கு இடமில்லாமல் போகிறது. இப்படி இந்த ஊரின் பெயரிலேயே ஞான மார்க்கம் மறைந்திருப்பது உணரத்தக்கது.

### தீர்த்தம் – சக்ர தீர்த்தம்

இக்கோயிலின் எதிரில் அமைந்துள்ள சக்ர தீர்த்தம் மஹாவிஷ்ணுவின் சக்ராயுதத்தால் உருவாக்கப்பட்டது. சகல பாவங்களையும் போக்கவல்லது. சிவ ஜோதியுடன் ஒன்ற வைக்கும் சக்தி பெற்றது.

### சூல தீர்த்தம்


இன்னொரு தீர்த்தம் பற்றி இக்கோயில் தலவரலாறு கூறுகிறது. முன் காலத்தில் தண்டகவனத்தில் கடும் வறட்சி ஏற்பட்டது. கதிரவனின் கடும் கிரணங்களால் குளம், குட்டைகள் வற்றின. மழை பொய்த்தது. தெய்வாதீனமாக திட்டைத் தலத்தை அடைந்த பசு, குதிரை, ஆடு முதலிய மிருகங்கள் மனம் உருகி வசிஷ்டேஸ்வரரைப் பூஜித்தன. அவைகளிடம் கருணை கொண்ட சிவபெருமான் தன் சூலத்தால் பூமியைத் தோண்டிக் குளம் ஒன்றை உருவாக்கினார். தன் தலையில் இருந்த கங்கை நீரால் குளத்தை நிரப்பினார். சூலத்தால் உருவாக்கப்பட்டதால் அக்குளம் சூலத் தீர்த்தம் என அழைக்கப்பட்டது. பசுக்களின் வேண்டுதலுக்கு இணங்க பரமேஷ்வரன் தீர்த்தம் உருவாக்கியதால் பசுபதீஸ்வரர் எனவும் அழைக்கப்பட்டார். இவ்வாறு மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் பெருமை உடையது தென்குடித் திட்டை.

### இறைவி உலக நாயகி

இங்குக் கோயில் கொண்டுள்ள இறைவி உலக நாயகி என்னும் மங்களாம்பிகை அனைத்து மங்களங்களை தரக் கூடியவள். இறைவனுக்கு நிகராக மிக உயர்ந்த பீடத்தில் அமர்ந்துள்ளாள். மாங்கல்ய பலத்திற்கும், குடும்ப ஒற்றுமைக்கும் வழிபட வேண்டிய அன்னை இவள்.

### சிறப்பு மூர்த்தி : குரு பகவான்

நவக்கிரகங்களில் மகத்தான சுபபலம் பெற்றவர் குரு பகவான். ஒருவரது ஜாதகத்தில் மிகக் கடுமையான பாவக்கிரகங்களால் ஏற்படக்கூடிய விளைவுகளைக் கூட தனது



குருபெயர்ச்சியில் அருள் தரும் தென்குடித்திட்டை ராஜ குரு

சுபப் பார்வையினால் தடுத்து நிறுத்தும் வல்லமை பிரகஸ்பதி என்று அனைவராலும் போற்றப்படும் குரு பகவானுக்கு உண்டு.

எல்லாச் சிவாலயங்களிலும் தென்கோஷ்டத்தில் சிவபெருமானின் ஞானவடிவான ஸ்ரீ தெட்சிணாமூர்த்தியே குருவாகப் பாவித்து வழிப்படப்படுகிறார்.

ஆனால் தென்குடித் திட்டையில் ஸ்ரீ குருபகவானே சுவாமிக்கும், அம்பாளுக்கும் இடையில் தனிச் சந்நிதியில் தனி விமானத்துடன் ராஜகுருவாக நின்ற கோலத்தில் அருள்பாலித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய அமைப்பு வேறு எங்கும் கிடையாது என்பதும் அறியத் தக்கது.

எனவே, தென்குடித் திட்டையே குரு பரிகாரத்திற்கு உகந்த ஸ்தலமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இத்தலத்தின் பெருமை அறிந்து வெளிநாட்டவர்களும் இங்கு வந்து வழிப்பட்டுச் செல்கின்றனர். சென்ற ஆண்டு **அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளிண்டன் அவர்களின் உறவினர்கேஸி மக்கோய், வார்னர் பிரதர்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் நிராவி,** கலிபோர்னியா மாநிலத் திருக்கோயில்களின் செயலாளர் ஆகியோர்கள் திட்டை வந்து குருபரிகார ஹோமங்கள் செய்து வழிப்பட்டுச் சென்றனர்.

### சந்திரனின் அபிஷேகம்

மூலவர் வசிஷ்டேஸ்வரரின் விமானத்தில் சந்திரகாந்தக்கல் வைத்து கட்டப்பட்டுள்ளது. சந்திரனிடமிருந்து கிரணங்களைப் பெறுகிறது அந்தக்கல். அது நீராக மாறி 24 நிமிடங்களுக்கு ஒருமுறை ஒரு சொட்டு தீர்த்தமாக இறைவன் மீது விழுகிறது. இந்த அதிசயத்தை இப்போதும் காணலாம். அபிஷேகப் பிரியனான சிவனுக்கு சந்திரனின் நித்யாபிஷேகம். தினம் ஒரு கலையாக தேய்வதற்கு சாபம் பெற்ற சந்திரனைக்காப்பாற்றி தன் சிரசில் வைத்து சிவன் சந்திரசேகரர் ஆனார். அதற்கு நன்றிக்கடனாக சந்திரன் தன் அபிஷேகத்தை காலம் காலமாக செய்து வருகிறான்.

### குருப்பெயர்ச்சி இலட்சார்ச்சனை விழா மற்றும் குரு பரிகார ஹோமங்கள்


வரும் ஆவணி மாதம் 3-ஆம் நாள் (19-08-2004) வியாழக்கிழமை இரவு 11-15 மணிக்கு குருபகவான் சிம்ம ராசியில் இருநது கன்னி ராசியில் பிரவேசிக்கிறார். இவ்விழாவையொட்டி திட்டை குருபகவானுக்கு சிறப்பு இலட்ச்சார்ச்சனையும், குரு பரிகார ஹோமங்களும் நடைபெற உள்ளது. இலட்ச்சார்ச்சனையில் பங்கு பெறக் கட்டணம் ரூ. 100/-ம், பரிகார ஹோமங்களில் பங்கு பெற ரூ. 250/-ம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நேரில் வரமுடியாதவர்கள் மேற்குறிப்பிட்ட தொகைக்கு மணி ஆர்டர் அல்லது டிமாண்ட் டிராப்ட் தஞ்சையில் மாற்றும் வகையில் செயல் அலுவலர், அருள்மிகு வசிஷ்டேஸ்வரர் திருக்கோயில், தென்குடித் திட்டை 61 3003, தஞ்சை மாவட்டம் என்ற முகவரிக்கு அனுப்பித் தங்கள் பெயர், நட்சத்திரம், ராசி, லக்னம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு சரியான முகவரியை பின்கோடு எண்ணுடன் எழுதினால் அர்ச்சனை / சங்கல்பம் செய்து தபால் மூலம் பிரசாதம் அனுப்பி வைக்கப்படும். பிரசாதத்துடன் சிறிய குரு பகவான் படம் ஒன்றும், பூஜையில் வைத்த குருபகவான் உருவம் பொறித்த 2 கிராம் வெள்ளி டாலரும் அனுப்பி வைக்கப்படும்..

***

# CANARA BANK

## Open your SB Account with any of our Branches
## &
## Begin a Lasting Banking Relationship with us

### You will then know a saving bank A/c with us the key to your prosperity




**DEPOSIT SCHEMES**

- Current Deposit
- Fixed Deposit
- Kamadhenu Deposit
- Canflexi Deposit
- Recurring Deposit
- Ashraya Deposit
- Card Deposit
- New Nithyanidhi Deposit

**PERSONAL LOAN SCHEMES**

- Housing Loan
- Home improvement Loan
- Cancarry Loan
- CanRent Loan
- CanCash Loan
- CanMortgage Loan
- CanMobile Loan
- CanPension Loan
- CanBudget Loan
- Doctors Choice
- CanMahila

**OTHER SCHEMES**

- SSI Loans
- Agricultural Loans
- Loan for allied activities (Ag)
- Educational Loans
- Loans to Professionals
- Loans to RT SBE
- Loans to Rural Industries
- Loans to Cottage Industries

**Our DEPOSIT SCHEMES & LOAN SCHEMES will help you TO FULFILL YOUR DREAMS.**

# ஆறுமுகம் வழிபட்டால்

செவ்வேள்

முருகப் பெருமானுக்கு இரண்டு தேவிமார்கள். ஒருத்தி சுரமகள், மற்றொருத்தி குறமகள்.

குறமகள் வள்ளி, முருகப் பெருமானுக்கு வலப்பக்கம் வீற்றிருக்கின்றாள். வள்ளியின் திருக்கரத்தில் இருப்பது தாமரைமலர்.

முருகப்பெருமானின் வலதுகண் சூரியன். சூரியனின் பார்வையில், வள்ளிநாயகி வைத்து இருக்கும் தாமரை எப்போதும் மலர்ந்து இருக்கும்.


சுரமகள் தெய்வயானை முருகப்பெருமானுக்கு இடப்பக்கம் வீற்றிருக்கிறார்.

தெய்வயானையின் திருக்கரத்தில் இருப்பது குமுதமலர்.

முருகப்பெருமானின் இடதுகண் சந்திரன். அந்தச் சந்திரனின் பார்வையில் தெய்வயானை



# ஆறுமுகம் வழிபட்டால்



முருகப் பெருமானின் அடியார்களுக்கு எல்லா நாளும் நல்லநாளே!

எல்லா கோளும் முருகன் அடியார்களுக்கு நன்மை செய்யும் கோள்கள்தாம்.

***“நாள் என்செயும்? வினைதான் என் செயும்? எனை நாடிவந்த***
***கோள் என் செய்யும்? கொடுங்கூற்று என்செயும்? குமரேசர் இரு***
***தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்***
***தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே”***

எனக் கந்தர் அலங்காரத்தில் சிறப்புற விளக்குகின்றார் அருணகிரிநாதர்.

நட்சத்திரங்கள் 27. அவை அஸ்வினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுசம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி,

# ஏறுமுகம்

வைத்திருக்கும் குமுதமலரும் எப்போதும் மலர்ந்து இருக்கும்.

தாமரையும், குமுதமும் வள்ளி, தெய்வயானையரின் திருக்கரங்களில் எப்போதும் மலர்ந்து இருப்பதைப் போல, முருகப் பெருமானை வழிபடும் அடியார்களின் வாழ்க்கையும் எப்போதும் மலர்ந்தே இருக்கும்.

ஆறுமுகத்தை வழிபட்டால் வழிபடும் அடியார்களுக்கு வாழ்க்கையில் என்றென்றும் ஏறுமுகம் தான். இறங்கு முகம் கிடையாது.

இதனைக் கந்தர் அலங்காரத்தில் அருணகிரிநாதர்

***"சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு***
***வெற்பனைச் செஞ்சுடர்வேல்***
***வேந்தனைச் செந்தமிழ்நூல் விரித்தோனை***
***விளங்குவள்ளி***
***காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில்***
***வாகனனைச்***
***சாந்துணைப் போதும் மறவாதவர்க்கு ஒரு***
***தாழ்வு இல்லையே!"***

என்று அற்புதமாகக் கூறுகின்றார்.

வெற்றிவேல் பெருமானைக் கொண்டாடும் அடியவர்களுக்கு வெற்றிமேல் வெற்றி உண்டாவது திண்ணம்.

***"முடியாப்பிறவிக் கடலில் புகார்***
***முழுதும்கெடுக்கும்***
***மிடியாம் படியில் விதனப் படார்***
***வெற்றிவேல் பெருமாள்***
***அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர்குலம்***
***அடங்கப்***
***பொடியாக்கிய பெருமாள் திருநாமம்***
***புகல்பவரே!'***

என்பதும் கந்தர் அலங்காரம் ஆகும். வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா!

***

# ஏதுபயம்?

உத்திரட்டாதி, ரேவதி ஆகியன. முருகன் அடியார்களுக்கு எல்லா நட்சத்திரங்களும் உறவு நட்சத்திரங்களே, உதவும் நட்சத்திரங்களே ஆகும்.

***முருகப்பெருமானின் தாள்கள் இரண்டு***
***தாள்களில் பூட்டிய சிலம்புகள் இரண்டு***
***தாள்களில் கட்டிய சதங்கைகள் இரண்டு***
***முருகப்பெருமானின் முகங்கள் ஆறு***
***முருகப்பெருமானின் தோள்கள்***
***பன்னிரண்டு***
***முருகப்பெருமான் அணிந்திருக்கும்***
***கடம்பமாலை ஒன்று***

ஆக இவையனைத்தையும் கூட்ட வருவன 27 ஆகும்.

இருபத்தி ஏழு நட்சத்திரங்களும் முருகனுக்கு உகந்த நட்சத்திரங்களே என்பதை உணர்த்தும் வகையில் கந்தர் அலங்காரத்தில் முருகனைக் கொண்டாடும் அருணகிரிநாதர் முருகப்பெருமானின் 27 அங்கமானவற்றை அழகுபடத் தொகுத்துக் கூறிப் போற்றியிருத்தல் காணலாம்.

முருகன் அடியார்களுக்கு எல்லா நாளும், கோளும் நன்மையே செய்வன ஆதலால் நவகிரகங்களால் முருகன் அடியார்களுக்குப் பாதிப்பு இல்லை என்பதை உறுதிபடக் கூறுகின்றார் அருணகிரிநாதர்.

அருணகிரிநாதர் சாஷ்டாங்கமாக சரவணபவனைப் பணிந்து தொழுதார். அவருடைய தலைஎழுத்தை முருகப் பெருமானின் திருவடி திருத்திச் செம்மையுற எழுதி விட்டது. இவ்வற்புதத்தை அவர்

***"சேல்பட்டு அழிந்தது செந்தூர் வயற்பொழில்***
***தேங்கடம்பின்***
***மால்பட்டு அழிந்தது பூங்கொடியார் மனம்***
***மாமயிலோன்***
***வேல்பட்டு அழிந்தது வேலையும் சூரும்***
***வெற்பும் அவன்***
***கால்பட்டு அழிந்தது இங்கு என் தலைமேல்***
***அயன் கைஎழுத்தே."***

என்று பாடியுள்ளபடியால் நவகிரகங்களால் முருகன் அடியார்களுக்குப் பாதிப்பு ஒருபோதும் இல்லை என்பது உறுதி.

***

வானிலிருந்து இறங்கிய மாணிக்க விமானத்தைப் பெருமானுக்குச் சாத்திய இந்திரன் வானுலகத்திலிருந்து வழிபாட்டிற்கு உரிய பொருள்களைக் கொண்டு வந்து பொற்றாமரைத் தீர்த்தத்தில் - நீராடி வழிபாடு செய்தான். இறைவன் "உன்னுடைய விருப்பம் யாது?" என்று கேட்டார். அதற்கு இந்திரன், "தங்கள் திருவருளால் என் கொலைப் பாவம் நீங்கப் பெற்றேன். தங்களைப் பூசிக்கும் பேறும் பெற்றேன்" என்றான்.

இறைவன் "அன்பனே! நீ சித்திரை மாதத்தில் பௌர்ணமி அன்று வந்து வழிபட்டுச் செல்வாயாக! இதனால் ஆண்டு முழுவதும் பூஜை செய்த பலன் கிடைக்கும். உனக்கு வீடு பேற்றை அருளுவோம்" என்று கூறி லிங்கத்துள் மறைந்தார்.

இதனைக் கேட்டு இந்திரன் பெரு மகிழ்ச்சி அடைந்தான். கீழே விழுந்து, வணங்கி எழுந்து ஆனந்தக்கண்ணீர் பெருக நின்றான்.


துருவாச முனிவர் காசியில் தம் பெயரினால் ஒரு சிவலிங்கம் ஸ்தாபித்து வணங்கி வந்தார். அப்போது சிவபெருமான் தன் திருவருளால் தன் முடியில் இருந்து பொன்னிறம் வாய்ந்த தாமரை மலர் ஒன்றைக் கீழே விழச்செய்தார். அதைத் துருவாச முனிவர் தம் இரு கரங்களால் ஏந்தி எடுத்துக் கொண்டு சுவர்க்க லோகத்திற்குச் சென்றார்.

அப்போது இந்திரன் அசுரர்களை அழித்து வெற்றிமாலை சூடி வெள்ளை யானையின் மீது பவனி வந்து கொண்டிருந்தான். அதைக் கண்டு மகிழ்ந்த துருவாச முனிவர் அவனுக்கு ஆசி மொழி கூறித் தன் கையில் உள்ள தாமரை

# திருவிளையாடல் புராணம்

## 2. வெள்ளை யானை சாபம் தீர்த்த படலம்

**இரா. அரங்கசாமி**



மலரைக் கொடுத்தார். தேவேந்திரன் செல்வச் செருக்கால் அதனை மதியாது தன் ஒரு கையால் நீட்டி அம்மலரை வாங்கி யானையின் மேல் வைத்தான். அவ்வெள்ளையானை அம்மலரைக் கீழே தள்ளித் தன் காலால் மிதித்தது. இதனைக் கண்ட துருவாசர் மிக்க கோபம் கொண்டார்.

"அற்ப செல்வத்தினால் செருக்குக் கொண்ட இந்திரனே! உன்னுடைய முடி, பாண்டியருள் ஒரு வீரனுடைய திகிரியினால் சிதறக் கடவது" என்று சபித்தார். இதனைக் கேட்ட தேவர்கள் நடுநடுங்கினர். துருவாச முனிவரின் காலில் விழுந்து "ஐயனே! எம் அரசனும் வெள்ளை யானையும் குற்றம் செய்ததால் சாபமிட்டீர். இச்சாபத்தை நீக்கியருள வேண்டும்" என்று வேண்டினர்.

துருவாச முனிவர் தேவர்கள் பொருட்டு மனம் இரங்கி "சிவபெருமான் அருளிய மலரை நிந்தித்தனால் உண்டான சாபம் பரிகாரத்தால் நீங்காது. ஆயின், இந்திரனுடைய தலை அளவாக வந்த குற்றம் முடி அளவாகப் போகக் கடவது. வெள்ளை

யானை காட்டானையாக மாறி நூறு ஆண்டுகள் திரிந்து பின்பு பழைய நிலையை அடைவதாக" என்று வேறு சாபம் அருளினார்.

வெள்ளை யானை சாபத்தின் காரணமாக மண்ணுலகம் வந்து காட்டானையாக மாறிக் கரிய நிறம் அடைந்து திரியலாயிற்று. பல இடங்களில் சுற்றித் தெய்வத் தன்மை மிக்க கடம்பவனத்தில் புகுந்தது. பொற்றாமரைத் தடாகத்தைக் கண்டது. அதற்குள் நூறாண்டுகள் கழியவே, முன்னை அறிவு தோன்றத் தடாகத்தில் நீராடியது. உடனே காட்டானை வடிவு நீங்கத் தன் பழைய வடிவம் பெற்றது.

துதிக்கையால் பொற்றாமரை நீரை முகந்துவந்து இறைவனை அபிஷேகம் செய்தது. உடனேமகிழ்வடைந்த இறைவன் சிவலிங்கத்தினின்றும் வெளிப்பட்டு "உனக்கு வேண்டியது யாது?" என்று கேட்டார்.

வெள்ளையானை "எந்தையே! உம்மை அடையப் பெற்ற எனக்கு ஒரு குறையுமில்லை. இந்த விமானத்தைத் தாங்கும் எட்டு யானைகளோடு நானும் ஒன்பதாவது யானையாகி இவ்விமானத்தை முதுகில் தாங்க வேண்டும் என்று என் மனம் விரும்புகின்றது. ஆகையால் அதனை அருள வேண்டும்" என்று வேண்டியது.

சோமசுந்தரக் கடவுள் "தேவேந்திரன் என்னிடம் மிகுந்த அன்பு பூண்டவன். ஆதலால் நீ அவனைச் சுமந்து செல்வதே எனக்கு மகிழ்வு அளிப்பதாகும்" என்று கூறிப் பல வரங்கள் நல்கி விடை கொடுத்தனுப்பினார். பின்னர் வெள்ளையானை வணங்கி விடைபெற்றுச் சென்று அம்மூர்த்திக்கு மேற்குத்திசையில் தன் பெயரால் ஐராவதத்தீர்த்தம் என்ற தீர்த்தத்தையும், ஒரு மூர்த்தியையும், விநாயகப் பெருமானையும் பிரதிட்டை செய்து அன்போடு பூஜை செய்து வந்தது.

இதனை அறிந்த இந்திரன் தன் ஏவலர்களை அனுப்பி வெள்ளை யானையை வரச் சொன்னான். ஆயின் வெள்ளையானை "வருவேன்" என்று சொல்லி ஏவலர்களை அனுப்பிவிட்டு அமமூர்த்திக்குக் கீழ்த்திசை வந்து "ஐராவதபுரம்" என்னும் ஒரு நகரைத் தன் பெயரால் உண்டாக்கி, தன் தலைவன் இந்திரன் பெயரால் "இந்திரேச்சுரர்" என்ற சிவலிங்கத்தை ஸ்தாபிதம் செய்து பூசை செய்து கொண்டிருந்தது.

(தொடரும்)

நன்றி : இராமலிங்கர் பணி மன்றம், சென்னை

# திருத்தணிகையில் ஆடிக் கிருத்திகை விழா

திருமால் திருக்கோயில்களில் சடாரி சார்த்தப் படுவதுபோல், முருகப்பெருமான் திருவடிகள் அடியவர்களுக்குச் சார்த்தப்படும் திருத்தலம் திருத்தணிகை முருகப்பெருமான் திருத்தலம் ஆகும்.

தணிகேசனின் மார்பில் சார்த்தப் பெறும் சந்தனம் எல்லா வியாதிகளையும் நீக்கவல்ல சர்வரோக நிவாரணி ஆகும்.

பாதகங்கள் பல செய்த பாவிகளும்



நம்பிக்கையோடு வந்து திருத்தணிகை முருகப் பெருமானை வழிபட்டால் அவர்கள் பாவங்கள் தீரும். இலாபங்கள் சேரும்.

முருகப் பெருமானே வள்ளியிடம் திருத்தணிகைத் தலப் பெருமையைப் பின்வருமாறு கூறுகின்றார்.

**"பாதகம் பல செய்தவர் ஆயினும் பவங்கள்**
**ஏதும் வைகலும் புரிபவர் ஆயினும் எம்பால்**
**ஆதரங் கொடு தணிகை வெற்பு அடைவரேல் அவரே**
**வேதன் மாலினும் விழுமியர் எவற்றினும் மிக்கார்"**

- கந்தப் புராணம்.

ஆடிக்கிருத்திகை விழாவில் பல லட்சக்கணக்கான அன்பர்கள் மலர்க் காவடிகள் தாங்கிவரும் காட்சியைக் காணக் கண்கள் கோடி வேண்டும். ஆடிக் கிருத்திகை விழா 09-08-04 அன்று மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

# குகன் என்ன நினைத்தான்?

**கலைமாமணி - மா. லட்சுமணன்**

கிருஷ்ணாவதாரத்திலே கீதை சொன்னான் கண்ணன். மக்கள் எப்படியெல்லாம் வாழவேண்டும்? என்ற தத்துவத்தை எடுத்துரைத்தான்.

இராமாவதாரத்திலே எந்த கருத்தையும் கூறவில்லை - ஏன்?



எப்படி வாழவேண்டுமோ அப்படி வாழ்ந்து காட்டினான் இராமன். அமானுஷ்ய செயல்கள் - அதிசயிக்கும் மாய வித்தைகள் எதையுமே புரியவில்லை......

ஜானகியை மணக்க ஜனகனின் வில்லை முறித்தாரே எனக்கேட்கலாம்... பளுதூக்குபவர் உடல் பலத்தால் சாதிப்பதில்லையா அதுபோலத்தான்.... இராமனின் வீரச் செயல் - . . வால்மீகியின் இராமாயணத்தில் - எந்த இடத்திலும் மனித செயலை மீறிய சம்பவம் இல்லை... எதையும் சாதிக்கும் வல்லமை பெற்றதாலே இறைவனுக்கு இணையானான் இராமன் - கம்பனின் காவிய நயம், மனிதனை தெய்வமாக்கியது.

நமக்கு உதவி செய்பவர்களை தெய்வம் மாதிரி என்று போற்றுவதில்லையா?...

இராமனின் நேர்மையும் அன்பும் கருணையும் தியாகமும், குகனை நண்பனாக்கியது... பரதன் இரதத்திலே வருகிறான் என்பதைப் பார்த்ததும் கோபம் கொள்கிறான். அவனை எதிர்ப்பதற்குத் தன்னைத் தயார் செய்து கொள்கிறான்.

பரதன் வந்து அண்ணன் இராமனின் பாதத்தில் விழுந்து வணங்கி அயோத்திக்கு வாருங்கள். ஆட்சிபீடத்தில் அமருங்கள்... இல்லையேல் வீண் பழிக்கு நான் ஆளாவேன் என்று கதறியதைக் கண்ட பின் தான் பரதனைப் பற்றி முதலில் தான் கணித்தது தவறு என உணர்ந்தான் குகன்...

இராமனுக்காக உயிரையும் கொடுக்கும் அளவுக்கு அன்பை வைத்திருந்தான் அந்தப் படகோட்டி. இராமனின் பாதுகையைச் சிரமேற் சுமந்து கலங்கிய கண்ணீருடன் அயோத்திக்குப் புறப்பட்டான் பரதன்... இவன் ஆயிரம் இராமனுக்குச் சமமானவன் என்கிறார் கம்பநாட்டாழ்வார். இராமனுக்கு முடிசூட்டுவதற்காக செய்யப்பட்ட கிரீடத்தின் மேல் - இராமனின் பாதுகையை வைத்தான் பரதன்...

இராமனுக்கு இட்ட ஆணையின்படி, பதினான்கு வருடம் முடிந்து கானகத்திலிருந்து அயோத்திக்கு வரும் வரை பாதுகையும் கிரீடமும் பாரதத்தைக் காத்தது எனக் கூறுகிறது இராமகாதை!...

திருமுடிமீது திருவடி வந்ததைப் பற்றிய பூர்வ கதையொன்று உண்டு.

வைகுந்தத்திலே மகாவிஷ்ணு தனது கிரீடத்தையும் சங்கு சக்ரத்தையும் இறக்கி வைக்கும் வேளையிலே - கருடாழ்வார் காண வந்திருக்கிறார் என்ற செய்தி கேட்டு -



பாதுகையைக் கழற்றிக் கிரீடத்தருகே விட்டுவிட்டுப் போனார்.

தன் அருகே பாதுகையா?!! சங்கடப்பட்டது கிரீடம், இப்படித் தான்.. தரமில்லாதவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்து விடுகிறது எனச் சங்கு சக்கரத்திடம் புலம்பியது...

"மன்னிக்க வேண்டும். நானாக உங்களருகே வரவில்லை. ஸ்ரீமந் நாராயணனே காரணம் அவரிடம் கூறுங்கள்" என்றது பாதுகை. கிரீடம் யோசித்தது. அங்கே மௌனம் நிலவியது.

வைகுந்த வாசனை தரிசிக்க வருபவர்கள் பரந்தாமனின் பாதத்தில் தான் விழுந்து வணங்குகிறார்கள்... அப்பேர்ப்பட்ட திருப்பாதங்களை அடியேன் தாங்கிக் கொண்டிருக்கிறேன். அடியார்கள் திருவடியை வணங்குவார்களே தவிர பெருமானின் கிரீடத்தையோ சங்கு சக்கரத்தையோ யாரும் தொட்டு வணங்குவதில்லை என்று கூறியது.. மௌனம் தொடர்ந்தது.

மறுநாள் காலையில் மகாவிஷ்ணு கூறினார். பாதுகையே! நேற்று என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியும் - வருத்தப்படாதே!... அடுத்து நான் எடுக்கப் போகும் அவதாரத்தில் உன்னை எங்கு வைக்க வேண்டுமோ அங்கு வைக்கிறேன்" என்றார்.

அதுதான் திருமுடி மீது திருவடி வந்த வரலாறு-...

இப்போதும் பெருமாள் கோவிலிலே - சேவித்து முடிந்ததும் சடாரி எனப்படும் கிரீடத்தை சாத்துவார்கள் - அடியார்களின் கிரீடத்தின் மேலே பாதுகைகளிருக்கும்...

இராமாயணத்துக்கு வருவோம். பதினான்கு ஆண்டுகள் முடிந்து... அயோத்தி திரும்பிய இராமனுக்கு பட்டாபிஷேகம். நாடே விழாக் கோலம் பூண்டிருந்தது. "கைகேயி எங்கே இருக்கிறார்கள்? அவர்களை நான்பார்க்க வேண்டும்" என அரண்மனையில் பலரிடமும் கேட்டான் குகன். இவன் இராமபிரானிடத்தில் மிக்க அபிமான முள்ளவன். கானகத்திலே இராமன் பட்ட துன்பத்துக்கு கைகேயிதான் காரணம் என்று இவனுக்கு நன்றாகத்தெரியும். பழிவாங்கத் துடிக்கிறானோ. நமக்கேன் வம்பு எனப் பலரும் பலகாரணங்களைக் கூறி "கைகேயி இந்த அரண்மனையிலேயே இல்லை" என்று போய்க் கொண்டிருந்தார்கள். குகனும் விடுவதாக இல்லை... இராமனின் முடிசூட்டு விழாவைப் பார்ப்பதில் கூட அவனுக்கு அக்கறை இல்லை... கைகேயியைக் கண்டாக வேண்டுமென்று அலைந்து வந்தான். முடிவில் கண்டுவிட்டான். அவளருகே வந்து நின்று... இராமபிரானுக்கும் தனக்கும் உள்ள அன்பின் பிணைப்பைக் கூறினான்..

கைகேயியின் நெஞ்சுபடபடத்தது. இவனால் தனக்கு ஆபத்து நேருமோ என அஞ்சினாள். எதைக் கூறினால் இவன் சமாதானமடைவான்? என யோசித்தாள்.

எதிர்பாராத வகையில் அவளின் காலில் விழுந்து எழுந்தான் குகன்.

"அம்மா! உங்களுக்கு ஆயிரம் கோடி கும்பிடு. எங்கள் இராமபிரானை நீங்கள் காட்டுக்கு அனுப்பவில்லையென்றால், நான் அந்த தெய்வத்தைத் தரிசிக்க முடியாமல் அல்லவா போயிருக்கும்..! நீங்கள் பல்லாண்டு வாழ்க" என மீண்டும் அவள் பாதத்தில் விழுந்தான் குகன்.



# பூ இல்லை, காய்காய்க்கும் இலை உண்டால் நோய்தீரும் அதிசய தலமரம்.

"களர்உகாய்" எனும் தலவிருட்சம் அப்பர்சுவாமிகள் அவதாரத் தலமாகிய திருவாமூர் அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயிலில் உள்ளது.

இவ்விருட்சம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் இருந்து வருகிறது.

இவ்விருட்சம் மரவகையைச் சேர்ந்ததா? அல்லது கொடி வகையைச் சேர்ந்ததா? என்று அறிய முடியாத வகையில் உள்ளது.

இவ்விருட்சத்தின் அருகில்தான் அப்பர் சுவாமிகளும், திலகவதியாரும் பிறந்து வசித்து வந்த வீடு இருந்துள்ளது.


இவ்விருட்சத்தின் அடிப்பகுதியை பார்த்தால் மரம் போலும், கிளைகள் பகுதியை பார்த்தால் கொடி போலும் காணப்படுகிறது.

இவ்விருட்சத்தின் இலைகள் அறுசுவையும் உடையதாக உள்ளது. இவ்விருட்சம் இதுநாள் வரை பூத்ததில்லை. ஆனால் காய்கள் மட்டும் கடுகு அளவில் காணப்படுகிறது.

இதன் இலைகள் நன்றாக துளிர்விட்டுக் காணப்படுகிறது. இந்த இலையில் அரிய மருத்துவ குணங்கள் ஏராளமாக உள்ளதாக கூறுகின்றார்கள். இத்தலத்திற்கு வருவோர் அனைவரும் இந்த இலையை உட்கொண்டு செல்கின்றனர்.

இவ்விருட்சத்தினை சித்திரை சதயம் (திருநாவுக்கரசு பெருமான் முக்தியடைந்தது) திருநாளில் குருபூஜை செய்து வழிபட்டு வலம் வருகின்றனர். இவ்விருட்சத்தினை திருநாவுக்கரசு சுவாமிகளாகவே எண்ணி வழிபடுகின்றனர்.

தகவல் : **ஜி. .இராஜநாயகம்,பி.ஏ.பி.எல்.**
இணை ஆணையர்
மயிலாடுதுறை.




ஈ வழிபட்ட திருத்தலம் திரு ஈங்கோய் மலை. இது காவிரி வடகரைத் தலங்களில் கடைசித்தலம் ஆகும்.

# திருக்கழுக்குன்றத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் சங்குதீர்த்தப் புஷ்கரமேளா, இலட்சத்தீபப் பெருவிழா

நான்கு வேதங்களும் நான்கு சிகரமாக அச்சிகரத்தின் உச்சியில் சுயம்புவாய்ச் - சுடர்க் கொழுந்தாய் இறைவன் எழுந்தருளித் திருவருள் பாலிக்கும் திருத்தலம் "வேதகிரி" என அழைக்கப்படும் திருக்கழுக்குன்றம் திருத்தலம் ஆகும்.

சமயக்குரவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வரும் வழிபட்டுப் பாடியுள்ள திருத்தலம் என்ற பெருமையும் திருக்கழுக்குன்றத்திற்கு உண்டு.

நால்வரால் போற்றப்பட்டுள்ள திருக்கழுக்குன்றம் நான்கு யுகங்களிலும் சிறப்புப் பெற்றிருக்கும் திருத்தலம் என்பதைத் தலப்புராணம் நமக்கு உணர்த்துகின்றது.



கிருதயுகத்தில் சண்டன், பிரசண்டன் எனும் இருமுனிவர்கள் வினைப் பயனாய்க் கழுகுருவம் பெற்று வேதகிரி தொழுது முத்தி பெற்றுள்ளனர்.

திரேதாயுகத்தில் சம்பாதி, சடாயு எனும் இரு கழுகுகள் வேதகிரி தொழுது இழந்த பலத்தை மீண்டும் பெற்று, இராம கைங்கரியத்தில் ஈடுபட்டு முத்தி பெற்றுள்ளனர்.

துவாபர யுகத்தில் சிவம்பெரிதா? சக்தி பெரிதா? எனும் வாதத்தில் ஈடுபட்ட சம்புகுத்தன், மாகுத்தன் எனும் தவமுனிவர் இருவரிடம் சிவபெருமானே **"வாதம் தேவையற்றது, யாமே சிவமும் சக்தியும்"** என அறிவுறுத்தியும் அவ்வறிவுரையை ஏற்காததால் கழுகுகளாகும் சாபம் பெற்றுப் பின் வேதகிரி வந்து வழிபட்டு சாபம் நீங்கிமுனிஉருவம் மீளப் பெற்று முத்தி பெற்றுள்ளனர்.

நடைபெறும் கலியுகத்தில் பூடா, விருத்தா எனும் இரு முனிவர்கள் சிவசாரூபம் வேண்டித் தவம் புரிந்தனர். சிவபெருமான் அவர்களுக்குக் காட்சி வழங்கி, வரம் வழங்க முற்பட்ட போது சிவசாயுச்சியமே தாம் விரும்பிய வரம் என மாற்றியுரைக்க சிவபெருமானின் கோபத்திற்கு ஆளாகினர். சம்பு, ஆதி எனும் கழுகு முனிவராகி வேதகிரிக்கு வந்து வழிபட்டு உய்யுமாறு அறிவுறுத்தியருளினார் சிவபெருமான்.

இவ்வாறு யுகங்கள் தோறும் கழுகுகள் வந்து வழிபடும் காரணத்தினாலேயே வேதகிரிக்குக் கழுக்குன்றம், கங்காசலம் எனும் பெயர்கள் வழங்கி வருவது நாம் அறிந்து மகிழத்தக்கதாகும்.

**"மூர்த்தி, தலம், தீர்த்தம்**
**முறையாய்த் தொடங்கினர்க்கோர்**
**வார்த்தை சொலச் சற்குருவும்**
**வாய்க்கும் பராபரமே"**

என்ற தாயுமான சுவாமிகளின் அருள் வாக்கிற்கு இணங்க மூர்த்திச் சிறப்பாலும், தலச்சிறப்பாலும், தீர்த்தச் சிறப்பாலும் யுகயுகங்களாகக் கீர்த்தி பெற்றுத் திகழ்ந்து வருவது திருக்கழுக்குனறத் திருத்தலம் ஆகும்.

வேதங்களே மலைகளாகி அதன் உச்சியில் சுயம்புவாய்ச் சுடர்க் கொழுந்தாய் இறைவன் திகழ்வது மூர்த்திச் சிறப்பாகும். வேதகிரியே சிவலிங்கம்போல் அமைந்து விளங்குகின்றது. ஆதலால் இறைவர் மலைக் கொழுந்தீசர் என வழங்கப் பெறுகின்றார்.

மலைக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அம்பிகை சொக்க நாயகி ஆவார்.


மலையடிவாரத்தில் உள்ள தாழக் கோயில்

இறைவர் பக்தவச்சலேஸ்வரர் எனவும், இறைவி திரிபுரசுந்தரி எனவும் வழங்கப் பெறுகின்றனர்.

“பெண்ணின் நல்லாள்” எனவும் அழைக்கப் பெறும் திரிபுரசுந்தரியின் மூர்த்தம் அட்டகந்தங்களால் ஆனபடியால் ஆடிப்பூரம், பங்குனி உத்திரம், நவராத்திரியில் வரும் நவமி ஆகிய மூன்று நாள்களில் மட்டும் இங்கு அம்பாளுக்கு முழு அபிஷேகம் நடைபெறுகின்றது.

மற்ற நாட்களில் அம்பாளின் திருவடிகளுக்கு மட்டுமே அபிஷேகம் நடைபெறுகின்றது.

**“கழுகுதொழு வேதகிரி சிகரி”** என்று அருணகிரிநாதர் பாடிச் சிறப்பித்துள்ளார். கழுகுகள் நாளும் வந்து வேதகிரீசுவரரை வழிபட்டு உணவு அருந்திய தலச்சிறப்பு, இத் “திருக்கழுக்குன்றம்” திருத்தலத்திற்கே அமைந்த தனிப்பெரும் சிறப்பாகும்.



சங்கு தீர்த்தத்தில் உண்டான சங்குகள்

கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் “ஹாவட்” என்னும் டச்சுநாட்டுத் தலயாத்திரீகர் தாம் எழுதியுள்ள நூலில் திருக்கழுக் குன்றத்திற்குக் கழுகுகள் தினமும், வந்து உணவு அருந்துவதையும், தாம் அக்காட்சியை நேரில் கண்டு வியப்புற்றதையும் குறிப்பிட்டுள்ளார்.

அண்மைக்காலம் வரை நடைபெற்று வந்த கழுகுகள் உணவுஉண்ணும் அதிசயத்தைப் பல்லாயிரக் கணக்கான பக்தர்களும், வெளிநாட்டு யாத்ரீகர்களும் நேரில் கண்டு மகிழ்ந்துள்ளனர்.

வேதகிரியில் பலப்பல மூலிகைகள் உள்ளன. சஞ்சீவிக் காற்று வீசுகின்றது. ஆகவே இம்மலையை வலம் வருபவர்கள். உடல்நோயும், உளநோயும் நீங்கி நீடித்த ஆயுள் பெற்று வாழ்ந்து வருவதும் இத்தல விசேடம் என்று கூற வேண்டும்.

திருப்போரூர் சிதம்பரசுவாமிகள்

**“வேதகிரி பவரோக வயித்திய**

**வேணி முடிக் கனியே”**

என உடல் நோய், பிறவி நோய் மருத்துவன் என வேதகிரிப் பெருமானைப் போற்றிப் பாடியுள்ளார்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை திருக்கழுக்குன்றத்தில் சங்குதீர்த்தப் புஷ்கர மேளாவும், அதையொட்டி இலட்சதீபப் பெருவிழாவும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.


இவ்வாண்டு அம்மகத்தான விழா வரும் ஆகஸ்ட் மாதம் 19 மற்றும் 20 ஆகிய நாட்களில் நடைபெறவுள்ளது. இவ்விழா பலலட்சக்கணக்கான மக்கள் பங்கேற்கவுள்ள ஒப்பற்ற விழாவாகும்.

எண்ணற்ற தீர்த்தங்கள் சிறப்புடன் திகழும் திருக்கழுக்குன்றத்தில் முக்கிய தீர்த்தங்களாகப் பன்னிரு தீர்த்தங்கள் திகழ்கின்றன.

அவற்றின் விவரம் பின்வருமாறு:

1. இந்திர தீர்த்தம், 2. சம்பு தீர்த்தம், 3. ருத்ரகோடி தீர்த்தம் 4. வசிட்ட தீர்த்தம், 5. மெய்ஞ்ஞான தீர்த்தம் 6. அகத்திய தீர்த்தம், 7. மார்க்கண்டேய தீர்த்தம் 8. விசுவாமித்திர தீர்த்தம். 9. நந்தி தீர்த்தம், 10. வருண தீர்த்தம் 11. அகலிகை தீர்த்தம், 12. பட்சித் தீர்த்தம்.

“என்றும் பதினாறு” என இறைவரால் வரம் அருளப் பெற்ற சிரஞ்சீவியான மார்க்கண்டேயர் அபிஷேக ஆராதனை செய்வதற்காக, ஓங்கார நாதத்துடன் சங்கு


சிட்டுக்குருவி வழிபட்டதால் “சிட்டிலிங்கேஸ்சுவரர்” எனப்பெயர் பெறும் இறைவர் எழுந்தருளியுள்ள திருத்தலம் சோழநாட்டு வடகரைத் தலமான வடகுரங்காடுதுறை தலமாகும்.

தோன்றிய சங்கு தீர்த்தமே மார்க்கண்டேய தீர்த்தமும் ஆகும். இப்பொழுதும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை சங்கு தீர்த்தத்தில் சங்கு தோன்றும் அற்புதம் நிகழ்ந்து வருகின்றது.

இம்மார்க்கண்டேய தீர்த்தம் எனப்படும் சங்கு தீர்த்தத்தில்தான் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை **"சங்கு தீர்த்த புட்கரமேளா"** மிகமிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

புட்கரமேளா என்பது பெருந்திரளாக மக்கள் கூடி உண்டாக்கும் ஆரவாரம் எனப் பொருள்படுவதாகும்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை சங்குதீர்த்தத்தில் பெருந்திரளமாக மக்கள் நீராடிப் பேராரவாரம் புரிவதால் இவ்விழா **"சங்கு தீர்த்தப் புட்கர மேளா"** எனச் சிறப்பிக்கப் படுகின்றது.

வடநாட்டு யாத்திரீகர்கள் பெருமளவு இவ்விழாவின் போது திருக்கழுக்குன்றம் வந்து சங்குதீர்த்தம் ஆடுவது "சங்குதீர்த்தப் புட்கர மேளா"வின் சிறப்பம்சம் ஆகும்.

கங்கை என்பது நதி தீர்த்தம், இராமேஸ்வரம் என்பது கடல் தீர்த்தம். சங்கு தீர்த்தம் என்பது குளத் தீர்த்தம். கங்கையைப் போல், இராமேஸ்வரம் போல் மகிமை மிக்க தீர்த்தம் சங்கு தீர்த்தம் ஆகும்.

தாமே சங்குதீர்த்தமாகத் திகழ்வதாக வேதகிரி இறைவர்


**"புராரி என்றும் தீர்த்தம் என்றும்**

**இரண்டில்லை இப்புரிக்கே"**

என்று அருளிச் செய்ததாகத் தலபுராணம் சங்கு தீர்த்தப் பெருமையை விவரிக்கின்றது.

குருசாபத்தால் சித்தப்பிரமை அடைந்த சம்புலிங்கம் என்பவன் பல இடங்களிலும் அலைந்து திரிந்து கடைசியாக இவ்வேதகிரிக்கு வந்து சங்குதீர்த்தத்தின் மகிமை ஒன்றும் அறியாமலே தீர்த்தத்தில் மூழ்கினார். சித்தம் தெளிவுபெற்றார் என்றால் சங்குதீர்த்த மகிமையை என்னென்பது? **சித்தப்பிரமை பிடித்தவர்கள் திருக்கழுக்குன்றத்தில் சில நாட்கள் தங்கித் தாழக்கோயிலும், வேதகிரியும் தொழுது வழிபட சித்தத் தெளிவு பெற்றுய்வது திண்ணம் ஆகும்.**

கயிலையில் நந்திதேவரின் சாபத்திற்கு ஆளான யட்சன் ஒருவன் மீனாகி ஆயிரம் ஆண்டுகள் துன்பப் பட்டான். அவனை ஒரு பறவை கௌவிக் கொண்டு பூவுலகம் வந்த போது அம்மீன் சங்குதீர்த்தத்தில் தவறி விழுந்ததும், சாப நீக்கம் பெற்று புட்பகவிமானம்



கழுகுகள் வழிபட்ட தலம் கழுக்குன்றம்

ஏறி வானுலகம் அடைந்த வரலாறும் சங்கு தீர்த்த மகிமையைக் கூறுகின்றது.

இத்தகைய சங்குதீர்த்தத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கங்கை, காளிந்தி, சரசுவதி முதலான நதிகள் எல்லாம் வந்து நீராடித் தூய்மை பெறுகின்றன.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை குரு கன்னிராசியில் பிரவேசிக்கும் போது கங்கை முதலிய புண்ணிய நதிகள் வந்து சங்கு தீர்த்தத்தில் நீராடித் தூய்மை பெறும் விழாவே "சங்கு தீர்த்தப் புட்கரமேளா" எனும் ஒப்பற்ற விழாவாகும்.

பூமிக்கு அடியில் கங்கை முதலான புண்ணிய நதிகள் ஊற்றாகத் தோன்றிச் சங்கு தீர்த்தத்தில் நீராடுவதால் சங்கு தீர்த்தம் புட்கரமேளாவின் போது பூரித்து நிரம்பி அலை மோதிக் கொண்டிருக்கும்.

அவ்வேளையில் பக்தர்கள் சங்கு தீர்த்தத்தில் நீராடி "அரஅர! வேதகிரிக்கு அரோஹரா" எனப் பேரொலி எழுப்பி மகிழ்வர்.

**"சங்கு தீர்த்தப் புட்கர மேளா"** நிகழும் ஆகஸ்ட் *19* அன்று மாலை, மலையிலும் தாழக் கோயிலிலும் இலட்சக்கணக்கான அகல் விளக்குகள் ஏற்றப்பட்டு எங்கும் பேரொளியாகவும் - பேரொலி ஆகவும் திகழும். இவ்வொப்பற்ற சங்குதீர்த்தப் புட்கர மேளாவையும், இலட்சதீபப் பெருவிழாவையும் காணும் மெய்யன்பர்கள் இகபர சுகங்கள் நிறையப் பெற்று பேரின்பப் பெருவாழ்வு காண்பது திண்ணம்.

**தீபமங்கள ஜோதி நமோநம!**
**திருக்கழுக்குன்றில் செல்வா போற்றி போற்றி!**

***

# சுவாமி பிரசாதம்



ஒவ்வொருகோயிலிலும் பூஜை முடிந்த பிறகு இறைவனுக்குப் படைக்கப் பட்டு பிரசாதம் பக்தர்களுக்கு வழங்கப்படும்.

ஒவ்வொரு கோயிலில் வழங்கப்படும் பிரசாதத்திற்கு ஒவ்வொரு சிறப்பு உண்டு.

பழநி என்றால் பஞ்சாமிர்தமும், திருப்பதி என்றால் லட்டும், சபரிமலை என்றால் நெய்யும் சுவாமி பிரசாதம் என்பது நம் நினைவிற்கு வரும். சில கோயில்களில் வித்தியாசமான பிரசாதங்கள் வழங்கப்படுகின்றது.

அவற்றில் முக்கியமான சில பிரசாதங்கள் இங்கே காணலாம்.

குற்றாலத்தில் குற்றாலநாதருக்கும் அம்மனுக்கும் நாள்தோறும் சுக்குக்காப்பி நைவேத்தியம் செய்கிறார்கள்.

சங்கரன் கோயிலில் சங்கர நயினார் சந்நிதியில் புற்றுமண்ணை சிறு சிறு உருண்டைகள் ஆக்கிப் பிரசாதமாகக் கொடுக்கிறார்கள்.

திருச்செந்தூர் முருகன் கோயிலில் பன்னீர் இலையில் விபூதிப் பிரசாதம் தரப்படுகின்றது.

அழகர்கோயிலில் தோசை பிரசாதமாக வழங்கப்படுகின்றது.

ஸ்ரீ வில்லிப்புத்தூர் ஆண்டாள் திருக்கோயிலில் தேன்குழல் பிரசாதமாக வழங்கப்படுகின்றது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மயிலை அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் 23.03.2002 அன்று அன்னதானத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

## தமிழகச் சட்டப்பேரவையில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள் இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கைக்கு வழங்கிய பதிலுரை



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!
நல்லோர்கள் வாழ்வைக் காக்க,
நமக்காக நம்மைக்காக்கத்
தெய்வம் நேரில் வருவதில்லை.
மனித உருவில் தெய்வமாய் இருக்கும்,
தெய்வத் திருவுருவாய்,
வீர வரலாற்றின் வெற்றித் திலகமாய்,
தமிழ்ர்களின் வீரத்தைப் பறைசாற்றும்
சிங்கத்தின் கர்ஜனையாய்,
அசைக்க முடியாத நம்பிக்கையாய்,
உருகாத உள்ளமும் உருகவைக்கும் திருவாசகமாய், பக்தர்களின் பசியைப் போக்கும்
அன்னதானத் தாயாய் விளங்கும்
மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா
அவர்களை வணங்கி
அறநிலையத்துறை மானியக் கோரிக்கையின் பதிலுரையைச் சமர்ப்பிக்கிறேன்.

### அன்னதானத் திட்டம்

ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்று பக்தர்களின் மனதறிந்து சிந்தித்த மகத்தான திட்டம்தான் - "அன்னதானத் திட்டம்"

ஏழைகளுக்காக அனைத்துத் துறைகளிலும் என்னென்ன நலத் திட்டங்களை உருவாக்கமுடியும் என்று சிந்தித்து, மேடு பள்ளம் இல்லாத சமத்துவ சமதர்மத்தை நிலைநாட்டியவர் **மாண்புமிகு அம்மா அவர்கள்.**

திருக்கோயில்களுக்கு வருகை தரும் சேவார்த்திகளுக்கு மதிய உணவு அளிக்கும் வகையில் "அன்னதானத் திட்டம்" 23.03.2002 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் துவக்கி வைக்கப்பட்டது.

அத்திட்டம் தற்போது 171 திருக்கோயில்களில் பெருவாரியான சேவார்த்திகள் மற்றும் பொதுமக்கள் பாராட்டுதல்களுடன் சீரோடும் சிறப்போடும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் 23.03.2002 முதல் 18.07.2004 வரை 1 கோடியே 40 லட்சத்து 34 ஆயிரத்து 229 நபர்கள் பயன் அடைந்துள்ளார்கள். இத்திட்டத்திற்கெனத் தனியாக வைக்கப்பட்டுள்ள அன்னதான உண்டியல் மூலமும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் மூலமாகவும், திருக்கோயில்களுக்கு நேரடியாக நன்கொடையாளர்கள் மூலமாகவும் இதுவரை




**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருமயிலை அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் 23.3.02 அன்று திருக்கோயில் அன்னதானத் திட்டத்தைத் தொடங்கி வைத்து அன்னதான உண்டியலில் தம் காணிக்கையைச் செலுத்துகிறார்கள்.**

வழங்கப்பட்டுள்ள நன்கொடை சுமார் **14** கோடியே **25** லட்சம் ரூபாய் ஆகும்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் தங்கள் பகுதியிலுள்ள திருக்கோயில்களுக்கு அன்னதானத் திட்டத்தை விரிவுபடுத்தக் கோரிவருகின்றனர்



மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள். தங்கள் பகுதியில் இருக்கும் திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் மேலும் சிறப்புடன் நடைபெறவும், அன்னதானத்திட்டம் செயல்படாத திருக்கோயில்களுக்கு அன்னதானத் திட்டம் தொடங்குவதற்கும் நன்கொடையாளர்கள் மூலம் நிதியுதவி ஏற்படுத்தித் தந்து மாண்புமிகு அம்மா அவர்களின் இந்தப் புனிதத் திட்டம் மென்மேலும் சிறந்து விளங்குவதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கோருகிறேன்.

அன்னதானத்திட்டம் செயல்படுத்தப்படும் அனைத்துத் திருக்கோயில்களிலும் ஆன்மீகம் மற்றும் ஒழுக்கநெறிகளைப் போதிப்பதற்காக ஞாயிறுதோறும் மாலை ஒரு மணி நேரம் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. சமயப் புலமை வாய்ந்த தமிழ்ப் புலவர்களையும், திருக்கோயில் ஓதுவார் பெருமக்களையும், தேவாரப் பாடசாலை ஆசிரியர்களையும், புலமை வாய்ந்த தமிழ்ச் சான்றோர்களையும் கொண்டு இவ்வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

### இலவசத் திருமணம் :

**நதியைப்போல நாமும் நடந்து பயன்தர வேண்டும்.**
**கடலைப்போல விரிந்த இதயம் இருந்திட வேண்டும்.**
**வானம்போல பிறருக்காக அழுதிட வேண்டும்.**
**வாழும் வாழ்க்கை உலகில் என்றும் விளங்கிட வேண்டும்**

**என்கிற உயரிய தத்துவத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட திட்டம்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கிய இலவசத் திருமணத் திட்டம்.**

எண்ணத்தில் நலமிருந்தால் உள்ளத்தில் தெளிவு உண்டாகும். இதனால் அனைவருக்கும் இன்பமே ஏற்படும். அத்தகைய நல்ல இதயம் படைத்த மாண்புமிகு அம்மா அவர்கள் திருமணச் செலவுகளைக்கூட செய்ய முடியாமல் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் நலிவடைந்த ஏழை எளிய மக்களுக்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை மூலமாக இலவசத் திருமணத்திட்டம் செயல்படுத்த ஆணையிட்டார்கள்.

அதன்படி *18.06.2003* அன்று *1053* இணைகட்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்கரங்களால் இலவசத்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் 1053 இலவசத் திருமணங்களை நடத்தி வைத்தார்கள்

திருமணம் செய்து வைக்கப்பட்டது. தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணைப்படி ஒவ்வொரு இணைக்கும் திருமாங்கல்யத்திற்காக 4 கிராம் தங்கம் உட்பட குடும்பத்திற்குச் சீர்வரிசைப் பொருட்களும் வழங்கப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருத்தேர்கள் பராமரிப்பு :**

440 திருக்கோயில்களில் 515 தேர்கள் உள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணைப்படி இந்த ஆண்டில் 45 திருத்தேர்கள் பழுதுபார்க்கப்பட்டு அவற்றில் 41 திருத்தேர்களின் தேரோட்டம் நடத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள 4 திருத்தேர்களின் தேரோட்டம் விரைவில் நடைபெறவுள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கண்டதேவி திருத்தேர் :**

சிவகங்கை மாவட்டம், கண்டதேவி அருள்மிகு சொர்ணமுக்தீஸ்வரர் என்கிற சிறகிலிநாத சுவாமி திருக்கோயில் தேரோட்டம் மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் அவர்களின் சீரிய ஆலோசனையின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டு எவ்வித பிரச்சனைகளும் இல்லாமல் 24.06.2002 அன்று தேரோட்டம் நடைபெற்றது. ஒருசில தவிர்க்கமுடியாத காரணங்களால் கடந்த 2003ஆம் ஆண்டு தேரோட்டம் நடத்த இயலவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அறிவுரையின்படி இந்த ஆண்டு சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பு மக்களையும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பேச்சு வார்த்தை நடத்தி 1.07.2004 அன்று தேரோட்டம் சிறப்பாக நடத்தப்பட்டது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**தாரமங்கலம் திருத்தேர்**

சேலம் மாவட்டம் தாரமங்கலத்தில் உள்ள அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலின் திருத்தேர்த் திருப்பணிக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் 25 லட்சம் நிதிஒதுக்கீடு செய்து ஆணையிட்டார்கள். அதன்படி திருத்தேர்த் திருப்பணி வேலைகள் விரைவாக செய்து முடிக்கப்பட்டுத் தேரோட்டம் விரைவில் நடைபெறவுள்ளது என்பதை இந்த அவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பழனிமலையில் ரோப் கார்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 07.03.2003 அன்று திண்டுக்கல் மாவட்ட நலத்திட்டத் துவக்க விழாவில் பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் பக்தர்களின் வசதிக்காக ரோப் கார் வசதி செய்து அளிக்கப்படும் என அறிவித்தார்கள். அவ்வறிவிப்பினைத் தொடர்ந்து ரூ.4 கோடி மதிப்பீட்டில் 'ரோப் கார் திட்டம் ' வகுக்கப்பட்டு அதற்கான பணிகளும் முடிந்துள்ளன. 20 பெட்டிகள் அடங்கிய இந்த ரோப் கார் வினாடிக்கு 1.8 மீட்டர் வேகத்தில் செல்லும் திறனுடையதாக உள்ளது. ஒரு மணி நேரத்திற்கு 600 நபர்களை மலை அடிவாரத்திலிருந்து மேல் பகுதிக்குக் கொண்டுச் செல்ல இயலும். அதே





போல் மேலிருந்து கீழ் வர இயலும். இத்திருக்கோயிலுக்கு வருகைத் தரும் சேவார்த்திகள் மற்றும் பொதுமக்கள் வசதிக்கென ரோப் கார் வசதி விரைவில் துவங்கப்படவுள்ளது.

### திருக்கோயில்களில் குடமுழுக்கு மற்றும் திருப்பணிகள்

மனிதன் எத்தனைக் காலம் வாழ்ந்தான் என்பதைவிட அவன் எப்படி வாழ்ந்தான் என்பதுதான் முக்கியம், அப்படிப்பட்ட மனிதனை நல்வழிப்படுத்த உரிய பாதையில் அழைத்துச் செல்ல இறைவழிபாடே சாலச்சிறந்ததாகும்.

இறைவனின் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்த வேண்டும் என்ற இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க இந்த



நிதியாண்டில் 137 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டது.

**தியாகத்தின் தலை நிமிர்ந்தால்**
**இந்தத் தரணிக்கு லாபமுண்டு.**
**தருமங்கள் வாழ்வதுண்டு -**
**அந்தத் தருமங்களே -**
**குடமுழுக்குத் திருவிழாக்கள் ஆகும்.**

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்ற நாள் முதல் (14.05.2001) கடந்த நிதியாண்டு வரை (31.3.2004) 3269 திருக்கோயில்களில் திருப்பணி செய்து குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக சென்ற நிதியாண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி 30 ஆண்டுகளுக்குப் பிறகு திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் - காந்திமதியம்மன் திருக்கோயில் குடமுழுக்கு 5.4.2004 அன்றும், கன்னியாகுமாரி மாவட்டம் சுசீந்தரம் அருள்மிகு தாணுமாலயசுவாமி திருக்கோயில் குடமுழுக்கு 7.4.2004 அன்றும், திருச்சி மாவட்டம் சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் குடமுழுக்கு 11.2.2004 அன்றும், அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயிலின் குடமுழுக்கு 24.05.2004 அன்றும்,




மற்றும் பல திருக்கோயில்களின் குடமுழுக்கு விழாக்களும் சீரும் சிறப்புமாக நடந்தேறியுள்ளன.

**தஞ்சமென்று வந்தவரைத் தாய்போல் ஆதரித்து**
**அன்பாலே மதிப்பளித்து,**
**அஞ்சாத நெஞ்சில் அன்புக்கு இடம் கொடுத்த**
**மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான்**

அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 46 திருக்கோயில்களின் குடமுழுக்கு விழாக்கள் 6.7.2004 அன்று ஒரே நாளில் நடந்தேறியது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிதிவசதியற்ற, பாடல் பெற்றதும் மற்றும் மங்களாசாசனம் பெற்றதுமான திருக்கோயில்களின் திருப்பணி செய்வதற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி இவ்வாண்டு நிதிவசதிமிக்க திருக்கோயில்களிலிருந்து நிதி மாற்றம் மூலம் 35 திருக்கோயில்களுக்கு 1 கோடியே 7 லட்சத்து 40 ஆயிரத்து 243 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**6000 திருக்கோயில்கள் திருப்பணி :**

மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி தமிழகத்திலுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் உள்ள 6000 சிறிய திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்திடும் வகையில் ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ரூபாய் 25 ஆயிரம் வீதம், 15 கோடி ரூபாயை, நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து திருப்பணி வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**யானைகள் பராமரிப்பு :**

**உயிர்களிடத்தில் அன்பு செய்ய வேண்டும்**
**என்றான் - மகாகவி பாரதி**

**விலங்கினங்களிடத்திலும் மாறா அன்பு செலுத்துகின்ற மாண்புமிக்கவர் நமது இதய தெய்வம் அம்மா அவர்கள்.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அறிவுரையின்படி "யானைகள் புத்துணர்ச்சி முகாம்" கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் தேதி துவங்கப்பட்டது. அடைப்பட்டிருந்த யானைகளுக்கு உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் புத்துணர்ச்சி அளிப்பதே இந்தச் சிறப்பு முகாமின் நோக்கம் ஆகும். யானைகள் ஒன்றுக்கொன்று இணக்கமாக இருக்கச் செய்தல், நல்ல இயற்கை சூழ்நிலையை ஏற்படுத்துதல் போன்ற வகைகளில் யானைகள் இம்முகாமின் மூலம் பயன் அடைந்தன.

திருக்கோயிலுக்குச் சொந்தமான 37 யானைகள், தனியாருக்குச் சொந்தமான 18 யானைகள், வனத்துறைக்குச் சொந்தமான 45 யானைகள் மொத்தம் 100 யானைகள் இம்முகாமில் கலந்து கொண்டன. இம்முகாம் 30 நாட்கள் நடத்தப்பட்டது. இம்முகாமில் நல்ல மருத்துவ சிகிச்சையும், இயற்கையான சூழ்நிலையில் நல்ல சத்துணவும், சிறப்பான பயிற்சியும், ஆற்றுக்குளியல் போன்ற அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த யானைகள் புத்துணர்ச்சி முகாமை இனிமேல் ஆண்டுதோறும் 45 நாட்கள் நடத்திட அறிவுறுத்தியுள்ளார்கள் என்பதை இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

### புராதன ஓவியங்கள்

மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் பொற்றாமரைக் குளத்தின் வடக்கு மற்றும் கிழக்கு பக்கச் சுவர்களில் அழிந்துள்ள புராதன ஓவியங்களை 26 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாகத் தீட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, அடுத்த ஆண்டு இறுதிக்குள் நிறைவடையும் வகையில் பணி விரைவுப்படுத்தப்பட்டுள்ளது.

### மகாமகப் பெருவிழா

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் நகரில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப்படும் மகாமகப் பெருவிழா இவ்வாண்டு 26.02.2004 முதல் 6.03.2004 வரை சிறப்புடன் கொண்டாடப்பட்டது. எப்போதும் இல்லாத அளவில் ஒரே நாளில் பக்தர்கள் புனித நீராடும் நிகழ்ச்சியை, ஆன்மிகப் பெருமக்களின் "10 நாட்கள் புனித நீராடி பலன் பெறலாம்" என்ற கருத்தின் அடிப்படையில் 10 நாட்கள் சுமார் 25 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் புனித நீராடச் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு அனைவரும் எவ்வித சிரமமுமின்றி பயனடைந்து பாராட்டினர்.

அப்பெருவிழாவை முன்னிட்டு 5 வைணவத் திருக்கோயில்கள் மற்றும் 12 சைவத் திருக்கோயில்களில் திருப்பணி செய்து குடமுழுக்கு செய்யப்பட்டது. மேலும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி கும்பகோணம் நகர் மற்றும் சுற்றியுள்ள திருக்கோயில்களுக்குத் தேவையான திருப்பணி வேலைகள் செய்தல் மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக சாலைவசதி, பக்தர்களின் வசதிக்கென குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள், பெரும் கூட்டத்தைச் சமாளிக்க தேவையான போக்குவரத்து வசதி ஆகிய அனைத்தையும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு அமைத்து மிகவும் சிறந்த முறையில் அனைவரின் பாராட்டுதலோடு மகாமகப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### வருண ஜெபம்

தமிழகத்தில் வான் பொய்த்து, மழை இல்லாது வறட்சியுற்ற நிலையில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி துறையின் ஆளுகைக்குட்பட்ட 1104 திருக்கோயில்களில் 30.06.2004 அன்று மழை வேண்டி "வருண ஜெபம்" நடத்தப்பட்டுள்ளது.

### திருக்குளங்கள் பராமரிப்பு :

அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 1552 திருக்கோயில்களுக்குக் குளங்கள் உள்ளன. அத்திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 2235 திருக்குளங்கள் உள்ளன. அவற்றில் 976



திருக்கோயில்களுக்குச் சொந்தமான 1145 திருக்குளங்கள் செப்பனிடப்பட்டு நல்ல நிலையில் உள்ளன. எஞ்சிய 576 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 1090 திருக்குளங்கள் செப்பனிடப்பட வேண்டியுள்ளது. இத்திருக்குளங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி கிராமப்புற வளர்ச்சித் திட்ட உதவியின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் பணிகளைச் செய்திடவும், நிதி வசதிமிக்க திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருக்குளங்களை அந்தந்தத் திருக்கோயில் நிதியிலிருந்து செலவிட்டுச் செப்பனிடவும், தொண்டு நிறுவனங்கள் மூலம் செப்பனிடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### திருக்கோயில் பணியாளர்கள் நலம்

### ஓய்வூதியம்

இத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் பணிபுரிந்து 60 வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற ஓதுவார்கள், அர்ச்சகர்கள், இசைக் கலைஞர்கள், வேத பாராயணர்கள் ஆகியோருக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்ற நாள் முதல் கடந்த நிதியாண்டு வரை 6 ஓதுவார்கள், 110 அர்ச்சகர்கள், 11 இசைக்கலைஞர்கள் மற்றும் 2 வேதபாராயணர்கள் ஆகியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிதியாண்டில் 31 நபர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அவர்களின் விண்ணப்பங்கள் ஓய்வூதியத் தேர்வுக் குழுவின் பரிசீலனைக்கு வைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

இத்துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத கிராமப்புற திருக்கோயில்களில் பணி செய்து 60 வயது நிறைந்த பூசாரிகளுக்கு ஓய்வூதியத் திட்டத்தின் மூலம் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்ற நாள் முதல் இந்த நிதியாண்டு வரை 1214 நபர்களுக்கு நபர் ஒருவருக்கு 500 ரூபாய் வீதம் ஓய்வூதியம் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியாண்டில் மேலும் 500 நபர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அனுமதியும், நிதி ஒதுக்கீடும் அளிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியத் தேர்வுக்குழு பரிசீலனைக்கு வைத்து ஓய்வூதியம் அனுமதிக்கப்படவுள்ளது.

### நிதிவசதியில்லாத திருக்கோயில் பணியாளர்கள் சம்பளம்

ரூபாய் 40 ஆயிரத்திற்கு கீழ் வருமானம் பெறும் திருக்கோயில்களில் மாத வருமானம் ரூ.400/-க்கும் குறைவாகச் சம்பளம் பெறும் பணியாளர்களின் சம்பள பாக்கிகள் ஆண்டுதோறும் இத்துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றது முதல் 1845 திருக்கோயில்களில் பணியாற்றும் 2761 பணியாளர்களுக்கு 1 கோடியே 83 ஆயிரம் ரூபாய் கடந்த நிதியாண்டு வரை வழங்கப்பட்டுள்ளது.

### ஆலய ஊழியர் குடும்பநல நிதி திட்டம்


பணியிலிருக்கும்போது மரணமடையும் திருக்கோயில் பணியாளர்களுக்கு உதவிடும் பொருட்டு **"ஆலய ஊழியர் குடும்பநல நிதித் திட்டம்"** ஏற்படுத்தப்பட்டு, இத்திட்டத்தின் மூலம் பணியிலிருக்கும் போது மரணமடையும் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு குடும்ப நல நிதி வழங்கப்படுகிறது. 01.08.2001 முதல் வாரிசுதாரர் குடும்பத்திற்கு ரூ. 75,000/- வழங்கப்படுகிறது. இவ்வரசு பொறுப்பேற்ற பின்பு 402 வாரிசுதாரர்களுக்கு 2 கோடியே 27 லட்சத்து 9 ஆயிரம் ரூபாய் குடும்பநல நிதியாக வழங்கப்பட்டது.

### இலவச காலணிப் பாதுகாப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழகம் முழுவதுமுள்ள திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் காலணிகளை இலவசமாகத் திருக்கோயில் நிர்வாகமே பாதுகாக்க வேண்டுமென ஆணையிட்டார்கள். அதனடிப்படையில் தமிழகம் முழுவதுமுள்ள திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் காலணிகளைத் திருக்கோயில் நிர்வாகமே 1.7.2004 முதல் இலவசமாகப் பாதுகாத்து வருகிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### திருக்கோயில் நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் :

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின்







## திருக்கோயிலால் நடத்தப்படும் அறப்பணிகள்





ஆளுகையின் கீழுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமாக சுமார் 4.79 லட்சம் ஏக்கர் நிலங்கள் இருந்தபோதும் அவற்றிலிருந்து போதுமான வருவாய் பெறப்படுவதில்லை. எனவே வருவாயை அதிகரிக்கும் பொருட்டு அனைத்து நிலங்கள் மற்றும் கட்டடங்களுக்கு நியாய வாடகை நிர்ணயம் செய்வதன் மூலம் திருக்கோயில் வருவாயை அதிகரிக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் ஆக்கிரமிப்புகளை அகற்றவும் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### நியாய வாடகை நிர்ணயம்

இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டிய கட்டிடங்கள் மற்றும் மனைகளுக்கு 30.06.2004 முடிய நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வணிகக் கட்டடங்கள் | 10 ஆயிரத்து 198 |
| வணிக மனைகள் | 6 ஆயிரத்து 106 |
| குடியிருப்புக் கட்டடங்கள் | 5 ஆயிரத்து 430 |
| குடியிருப்பு மனைகள் | 21 ஆயிரத்து 997 |

இவ்வாறு நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்ட பின்பு கட்டடங்கள் மூலம் 1 கோடியே 1 லட்சத்து 28 ஆயிரம் ரூபாயும், மனைகள் மூலம் 4 கோடியே 29 லட்சத்து 22 ஆயிரம் ரூபாயுமாக திருக்கோயில்களின் வருமானம் உயர்ந்துள்ளது என்பதை மகிழ்சியுடன் அந்த அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றவுடன் வருவாய் நீதிமன்றம் மூலம் 425 ஏக்கர் மற்றும் 35 சென்ட் நிலங்கள் கையகப்பட்டுத்தப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் கோயம்புத்தூர் வடவள்ளி என்ற இடத்தில் மருதமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான சுமார் 10 கோடி மதிப்புள்ள 11 ஏக்கர் 27 சென்ட் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

### ·புதிய அறிவிப்புகள் :

1. நாகர்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையர் அலுவலகக் கட்டடம் மற்றும் குடியிருப்பு ஆகியவை 6 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் செலவில் பழுதுபார்க்கப்படும்.
2. கும்பகோணம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையர் அலுவலகத்திற்கு 46 லட்சம் ரூபாய் செலவில் புதிதாக அலுவலகக் கட்டடம் ஒன்று கட்டப்படும்.
3. சென்னை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் அலுவலக உபயோகத்திற்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் 5 கணிப்பொறிகள் கொள்முதல் செய்யப்படும்.
4. சென்னை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் அலுவலக உபயோகத்திற்கான தளவாடங்கள் 2 லட்சம் ரூபாய்க்குக் கொள்முதல் செய்யப்படும்
5. கோவை, புதுக்கோட்டை, மதுரை மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் சிலைகள் பாதுகாப்பு மையங்கள் கட்டப்படும்.
6. ஆதி-திராவிடர் வாழும் பகுதியிலுள்ள திருக்கோயில்களுக்கு 31 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் திருப்பணிகள் செய்யப்படும்.

***

திருச்சிராப்பள்ளி நகரில் உறையூரில் அமைந்துள்ள அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில் உலகப் புகழ்பெற்ற சக்தி தலங்களுள் ஒன்று. உலக மக்கள் யாவருக்கும் வீடு கிடைக்கும் வரை வானமே கூரையாகக் கொண்டு தனக்குக் கூரையில்லாமல் வெட்ட வெளியில் வீற்றிருந்து வெயில், மழை, பனி போன்ற எல்லா



மாம்பழ அபிஷேக வழிபாடு

# மாம்பழச்சாறு அபிஷேகம் அருந்த உண்டு வெகு சேமம்

இயற்கைச் சீற்றங்களையும் தாங்கி வருகிறாள் அம்மன்.

உலக மக்களின் நன்மைக்காக ஆண்டுதோறும் வைகாசி மாதம் கடைசி வெள்ளிக் கிழமையன்று அம்பாளுக்கு மாம்பழச்சாறில் அபிஷேகம் நடைபெறும். இந்த ஆண்டும் 11.6.2004 அன்று மாம்பழ அபிஷேகம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

திருக்கோவிலுக்கு வரும் பக்தர்கள் அனைத்து வகை மாம்பழங்களையும் வாங்கி வந்து தாங்களே பிழிந்து சாறு எடுத்து 11.06.04 மதியம் 12.30 மணி முதல் 1. 30 மணி வரை அபிஷேகம் இனிதே நடைபெற்றது. திருக்கோவிலுக்கு வந்த பக்தர்கள் அனைவருக்கும் அபிஷேகம் செய்த மாம்பழச்சாறு விநியோகிக்கப்பட்டது.


மனதில் ஒன்றை நினைத்து -அம்பாளின்
மலர்ப் பாதம் போற்றி
மாம்பழச் சாற்றினை அருந்த
மனதில் எண்ணிய யாவும், எண்ணியபடி
நடக்கும். இது திண்ணம்.

தகவல்
**பி.சுப்பரமணியன்**
செயல் அலுவலர்
அருள்மிகு வெக்காளியம்மன்
திருக்கோயில்



நண்டு வழிபட்டதால் "நண்டாங்கோயில்" என வழங்கும் திருத்தலம் சோழநாட்டு வடகரைத்தலமான திருந்து தேவன்குடி திருத்தலம் ஆகும்.





புலி வழிபட்ட திருத்தலம் திருப்புலிவனம் அருள்மிகு வியாக்ரபுரீஸ்வரர் திருக்கோயில் ஆகும். காஞ்சிபுரத்திலிருந்து உத்திரமேரூர் செல்லும் வழியில் இத்திருத்தலம் உள்ளது.

கிளி வழிபட்டதால் "சுகவனம்" என வழங்கும் திருத்தலம் சேலம் சுகவனேஸ்வரர் திருத்தலம் ஆகும்.



# எங்கள் முத்துமாரி

புலவர் வ. ஞானப் பிரகாசம்

இரேணுகையம்மை வரலாறு பற்பலவாறு வழங்கப்படுகின்றது. கலைக்களஞ்சியம், அபிதான சிந்தாமணி, காஞ்சிப் புராணம், பூசாரிகள் சொல்லி வரும் மரபு வழிக்கதைகள் இவைகள் வழி பலவாறாக செய்திகள் தெரியவருகின்றன.

இரேணு என்னும் அரசனுக்கு மகளாகப் பிறந்தவள் இரேணுகை. இவள் அம்பிகையின் அம்சமாகப் பிறந்தவள். கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், பண்பாட்டிற் சிறந்து விளங்கிய இவள் அழகிற்கு ஓர் எல்லையாகவும் விளங்கினாள். மணப்பருவம் எய்திய இவள் தன் கணவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள திக்விசயம் செய்கிறாள். நைமிசாரணிய வனத்தில் ஜமதக்கினி என்ற முனிவரைச் சந்திக்கின்றாள்.



இவர் பிருகு வம்சத்திற் பிறந்தவர். பிருகு முனிவரின் மகன் ரிசீகனுக்கும் காதி என்ற அரசரின் மகள் சத்தியவதிக்கும் மகனாய்ப் பிறந்தவர். ஜமதக்கினி என்ற சொற்குப் பலசிறந்த பொருள்கள் உண்டு. ஓமம் செய்யப் பெற்ற அக்கினிபோல் பிரகாசிப்பவர் என்பதும் ஒரு பொருள். இவர் இருக்கு வேத மந்திரங்களை மனத்தினால் கண்டு வெளியிட்டவர். இவரே ஜமதக்கினி கோத்திரத்தின் தலைவர். காசிபர் அத்திரி முதலான ஏழு முனிவர்களில் ஒருவர்.

இத்தகைய முனிவரைக் கண்ட இரேணுகை அவரையே கணவராக அடைகின்றாள். அம்முனிவருக்குத் தொண்டு செய்து இல்லறத்தில் வாழ்கிறாள். அம்முனிவர் சிவபூசை செய்வதற்காக நீர் கொண்டு வர நாளும் கங்கைக்குச் செல்வாள். ஆற்றில் மணலைக் குடமாக வனைந்து தண்ணீர் எடுப்பாள். அவள் கற்பின் திறத்தால் குடமும் தண்ணீர் முகந்து வரும். இதற்குச் சலம் திரட்டுதல் என்று பெயர். இத்தண்ணீரைக் கொண்டு வந்து தந்தவுடன் முனிவர் சிவபூசை செய்து முடிப்பார்.

இவர்களது இல்லறத்தில் தன்னுவன், அனுவன், விசுவாசு, இராமர் என நான்கு பிள்ளைகள் தோன்றினர். கடைசிப் பிள்ளை ஆகிய இராமர் திருமாலின் அம்சமாகப் பிறந்தவர். சிவனை வழிபட்டுப் பரசு என்ற கருவியைப் பெற்றவர். இதனால் பரசுராமர் என்ற பெயரைப் பெற்றவர்.

இரேணுகை தன் கணவனுக்குத் தொண்டு செய்து வரும் நாளில் ஒருநாள், ஆற்றில் தண்ணீர் எடுக்கும் போது, மேலேவான் வழியே சித்திராங்கதன் என்னும் கந்தர்வன் ஒருவன் சென்று கொண்டிருந்தான். அவன் வடிவ நிழலைத் தண்ணீரில் பார்த்த இரேணுகை அவன் அழகைக் கண்டு மனத்தால் வியந்து மகிழ்ந்தாள். அவ்வளவில் சலம் திரண்டு வரவில்லை.

தன் கணவன் எதிர் வந்து, தன் பழிக்கு நாணி தலைகுனிந்து நின்றாள். 'உள்ளத்தால் உள்ளலும் தீதே' என்ற குறள்மொழிக்கேற்ப, நினைத்தலும் செய்தலோடு ஒக்கும் என்ற நிலையில் அவள் பாவத்திற்கு உரியவளானாள்.

வந்த பாவம் அடுத்த பிறவியில் தொடரா வண்ணம் அப்பொழுதே தீர்த்துவிட நினைத்த முனிவர் தம் பிள்ளைகளை ஒவ்வொருவராக அழைத்துத் தாயை வெட்டிவிடுமாறு பணித்தார். முதல் மூவரும் 'தாயிற் சிறந்த கோயிலும் இல்லை' என்ற நிலையில் தம் தாயை வெட்ட மறுத்தனர். அவர்களை வேடர்களாகப் போகுமாறு முனிவர் சபித்தார்.



இறுதி மகனோ 'தந்தைசொல் மிக்க மந்திரமில்லை' என்ற நிலையில் தம் பரசு கொண்டு வெட்டி வீழ்த்த முனைந்தார். தாய் அஞ்சி ஓடினாள். ஒரு சக்கிலிப் பெண் பாதுகாப்பாக அவளைக் கட்டிக் கொண்டாள். பரசுராமரின் பரசுக்கு இருவரும் இரையாயினர். (வேலூர்-திருப்பத்தூர் பேருந்து வழியில் உள்ள வெட்டுவாணம் என்ற ஊரே வெட்டப்பட்ட இடமாகக் கூறுவர்). தம் தாயின் தலையைக் கொண்டு வந்து தம் தந்தையின் திருவடிகளில் காணிக்கையாக்கினார். தம் சொல்லின்படி நடந்த மகனைக் கண்டு மகிழ்ந்து வேண்டியதைக் கேட்குமாறு கூறினார். அறிவுக் கூர்மையும், தந்தைப் பாசமும் கொண்ட பரசுராமர் இரண்டு வரந்தர வேண்டினார். தந்தையும் தர இசைந்தார். முதல் வரத்தால் தம் தமையன்கள் சாபத்திலிருந்து விடுதலை பெற வேண்டிக் கொண்டார். இரண்டாவது வரத்தால் இறந்த தாயை மீண்டும் உயிர் பெற்று எழுவதற்கு அருளுமாறு வேண்டினார். தந்தை பொன் பிரம்பும் நீரும் தந்து மந்திரம் தந்து மந்திரம் மொழிந்து எழுப்பி வருமாறு கூறினார். பரசுராமர் இரத்த வெள்ளத்தில் கிடந்த உடல்களில் வேறுபாடு தெரியாது தம் தாயின் தலையை வேற்றுடலில் பொருத்தி உயிர்ப்பித்து அழைத்து வந்தார்.

இதற்கிடையில் சூரிய மரபில் வந்தவனான கார்த்தவீரியன் என்பவனது பிள்ளைகள், தம் தந்தைக்கும் முனிவருக்கும் ஏற்பட்ட பகைமையுணர்வால் சமதக்கினி முனிவரைக் கொன்று விட்டனர். கணவன் இறந்த செய்தி கேட்டு இரேணுகை தீயில் புகுந்தாள். இந்திரன் மழைபொழிந்து தீயை அணைத்தான். இரேணுகை இறக்கவில்லை. ஆனால் உடலில் கொப்புளங்கள் ஏற்படுகின்றன. ஆடை முழுவதும் எரிந்து விடுகிறது. வனத்தில் பக்கத்தில் இருந்த வேப்பிலைக் கொத்துகளை ஒடித்து ஆடையாக உடுத்திக் கொள்கிறாள்.



மும்மூர்த்திகளும் காட்சி தந்து "அம்மா! நீ பூமியில் சிலை வடிவாக எழுந்தருளி உன்னை வழிபடுவோருக்கு அருள்பாலித்து, வழி படாதோர்க்கு இன்னல் தந்து மனம் திருந்தச் செய்வாயாக. உன், உடல் கொப்புளங்களைப் போல மக்களுக்கு அம்மைக் கொப்புளங்கள்





வரச் செய்வாயாக. மக்கள் பொங்கலிட்டும், பானகம், கூழ், மாவு முதலியவை வைத்தும் உனக்குப் படைப்பார்களாக. எல்லா ஊர்களிலும் கிராம தேவதையாக எழுந்தருளி அருள்பாலிப்பாயாக" என்று அருளினர்.



இரேணுகை சிவனிடமிருந்து சூலமும், விஷ்ணுவிடமிருந்து சக்கரமும், பிரம்மனிடமிருந்து வேதங்களும், எமனிடமிருந்து பாசமும் பெற்று வேற்றுடலைப் பூமியில் புதைத்து, தன்முக மண்டலத்தை மட்டும் மக்களுக்குக் காட்டி விளங்குகின்றாள்.

இரேணுகையைப் பற்றிய வேறுசில செய்திகளையும் இங்கே சுருங்கக் காணலாம்.

அபேத்திய வருமனின் மகள் இரேணுகை எனவும், கார்த்தவீரியனையே கண்டு மனம் சலனப் பட்டாள் எனவும், மீண்டும் உயிர் பெற்று காஞ்சிபுரம் அடைந்து சிவலிங்கத்தை நிறுவிப் பூசித்தாள் எனவும், உமை உடனுறைய சிவபெருமான் காட்சி தந்து, உமையன்மையின் வழி அருள்பாலித்தார் எனவும், இரேணுகை சர்ப்ப குண்டலம் உடையவளாய், வாளும் கட்கமும் கையேந்தி சிறு தேவகணங்கள் புடை சூழ தெய்வமாக விளங்கினாள் எனவும் காஞ்சிப் புராணம் கூறும்.



ஆதி, பகவன் இவர்கட்குப் பிறந்தவள் எனவும், ஏகாலியர் வெள்ளாவி வைக்கும் இடத்தில் பிறந்ததால் 'உப்பை' எனப் பெயர் பெற்றாள் எனவும், பின் அரசனால் வாங்கிவளர்க்கப்பட்டாள் எனவும் சிலர் கூறுவர்.

உயிர் பெற்ற பின் வண்ணாத்தியால் காப்பாற்றப்பட்டு, ஆடை தரப் பெற்றாள் எனவும், எனவேதான் வண்ணார் சில இடங்களில் பூசாரிகளாகவும், கரகம் ஆடுபவர்களாகவும் இருக்கிறார்கள் எனவும் சிலர் கூறுவர்.

இன்று ஊரெங்கும் உள்ள மாரியம்மன் கோவில்களெல்லாம் இரேணுகை கோவில்களே. தலையும் உடலும் மாறிப் பொருந்தியதால் 'மாறி' எனப் பெயர் ஏற்பட்டது; 'மாரி' எனத் திரிந்தது என்பர்.

மாரி - மழை; வெப்பத்தைத் தணிவித்து வெப்பு நோய்களாகிய அம்மை முதலியவற்றைத் தீர்த்து நாடு தழைக்கச் செய்தும், மாடு பிழைக்கச் செய்தும் மக்களை மழைபோலக் காப்பவள் என்பதால் மாரி எனப் பெயர் பெற்றாள் என்பது பொருத்தமாய் உள்ளது.


மாணிக்க வாசகர், திருவெம்பாவையில் அன்னையின் திருவருளைப் போல மழையைப் பொழியக் கூறுவதும் இங்கு ஒப்பிட்டு உணரத்தக்கது.

இவள் ஆயி, மகமாயி, செல்வி, செல்லி, செல்லத்தாள், செல்லாண்டியம்மன், ஆயிரங்கண்ணுடையாள், முத்துமாரி, கங்கம்மா, கங்கை, முத்தாலம்மை எனப் பல பெயர்களில் விளங்குகின்றாள். இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் மாரியன்னை வழிபாடு நிகழ்ந்து வருகின்றது.

***மாரியம்மனை வழிபடுவோம்!***
***மாரிவளம் பெறுவோம்.***

***

# சுந்தரர் ஆற்றிய அற்புதங்கள்



'ஆன்மீகத் தென்றல்' கே.பி. முத்துசாமி

1) சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் குண்டையூர்க் கிழார் தந்த நெற்குவியல்களைப் பதிகம்பாடிச் சிவபெருமான் திருவருளால் பூதங்களைக் கொண்டு திருவாரூருக்கு எடுப்பித்துக் கொண்டார்.

2) திருப்புகலூர் திருக்கோயிலில் தனக்குப் பொருள் வேண்டும் எனப் பதிகம் பாடி முற்றத்தில் தலைக்கு உயரமாக வைத்துப் படுத்திருந்த சுட்ட செங்கற்கள் எல்லாம் சிவனருளால் தங்கக் கட்டிகளாக மாறத் திருவருளால் பெற்றார்.

3) இவர் பொன் வேண்டி திருப்பாச்சிலாச்சிரமத்திலும், திருஓணகாந்தன்தளியிலும் உள்ள சிவபெருமானை வேண்டிப் பதிகம்பாடிப் பொற்குவை பெற்றார்.

4) திருமுதுகுன்றம் என்னும் விருத்தாசலத்தில் சிவபெருமான் திருவருளால் பெற்ற பொன் முழுவதையும் அங்குள்ள மணிமுத்தாற்றில் போட்டுவிட்டுத் திருவாரூரிலுள்ள கமலாலயத் திருக்குளத்தில் மூழ்கிக் குறைவின்றி எடுத்துக் கொண்டார்.

5) திருக்குருகாவூருக்கு அருகில் சிவபெருமானை வேண்டிப் பதிகம்பாடி அந்தணக் கோலத்துடன் வந்து கொடுத்த சோற்றைப் பெற்று உண்டார்.

6) திருவையாறப்பனைத் தரிசிக்கச் சென்றபோது காவிரியில் நீர் பெருகித் தடை செய்ய, பதிகம் பாடி நீரோட்டத்தைத் தடை செய்து நிறுத்தி ஆற்றைக் கடந்து சென்றார்.

7) திருப்புக்கொளியூர் அவிநாசியில் ஐந்தாண்டுப் பருவத்தில் முதலையால் உண்ணப் பெற்று மாண்ட அந்தணச் சிறுவனை இரண்டாண்டுகள் சென்ற பிறகு ஏழு வயது சிறுவனாக அதே முதலையின் வாயிலிருந்து வரும்படி அழைத்துக் கொடுத்தருளினார்.

8) இவர் திருமணம் செய்தபோது செய்த சபதத்தை மீறி சங்கிலியாரைப் பிரிந்து திருவாரூர் செல்ல உத்தேசித்து திருவொற்றியூர் எல்லையைத் தாண்டியவுடன் இரண்டு கண்களும் குருடாயின. வெண்பாக்கத்தில் இறைவன் இவருக்கு ஊன்று கோல் தந்தருளினார். பின்னர் கச்சி ஏகம்பனையும் காமாட்சி அம்மையையும் பாடி இடது கண்ணும், திருவாரூர் பெருமானைத் துதித்துப் பாடி வலது கண்ணும் தெரியப் பெற்றார்.

9) இவர் சிவபெருமானைப் பரவையாரிடம் தூது அனுப்பியது தகாத காரியமென்று ஏயர்கோன் கலிக்காம நாயனார் பகை கொண்டார். இவர் கோபத்தைத் தணிக்குமாறு சிவபெருமானிடம் சுந்தரர் வேண்டினார். கலிக்காமருக்கு சூலை நோய் தந்து சுந்தரர் வந்தால் மட்டுமே தீரும் என்று சிவபெருமான் அருளினார். தன் சூலை நோய் தீர்க்க சுந்தரர் வருவது அறிந்து மனம் நொந்து கலிக்காமர் உடை வாளினால் தன் வயிற்றைக் கிழித்துக்கொண்டு இறந்து கிடக்க அதைப் பார்த்து சுந்தரரும் தன் வயிற்றைக் கிழித்துக் கொள்ள முயன்றபோது சிவபெருமான் கலிக்காமரை உயிர்ப்பித்தார். சுந்தரரும் கலிக்காமரும் ஒருவரை ஒருவர் வணங்கி மகிழ்ந்தனர்.

10) திருநாகைக்காரோணத்தில் பதிகம்பாடி பொன்னும், மணியும் ஆபரணங்களும் பெற்றார்.

11) சேரமான் பெருமாள் நாயனரால் இவருக்கு வழங்கப்பட்ட செல்வத்தை சிவ பூதகணங்களாகிய கள்வர்கள் பறித்துக்கொள்ள திருமுருகன் பூண்டியில் பதிகம்பாடி இழந்த பொருட்களை மீண்டும் பெற்றார்.

12) திருவஞ்சைக் களத்தில் சிவபெருமானை வேண்டி கயிலையிலிருந்து வந்த வெள்ளை யானை மீதேறி தேவரும் மூவரும் எதிர்கொண்டழைக்க **'ஆடி சுவாதி'** நாளில் கயிலை அடைந்து சிவப்பரம்பொருளை அடைந்தார்.

# மகாபாரதம்

## 4

முனைவர் த.அமிர்தலிங்கம்

"அந்தநின் மைந்தன் தானே அருஞ்சிலை விசயனோடு
வந்தெதிர் மலைய நின்றான் உறவுமற் றறியமாட்டான்
சிந்தையின் ஐயம் தீர இதனை நீ தெளியச் சொல்லிக்
கொந்தவிழ் அலங்கலானைக் கூட்டுக விரைவினம்ம"

(கிருட்டிணன் தூது 156)

"தம்பியர் ஐந்துபேரும் தனித்தனி ஏவல் செய்ய
வம்பவிழ் அலங்கலோடு மாமணி மகுடஞ் சூட்டி
அம்புவி முழுதும் நீயேயாளலாம் வருக"

(கிருட்டிணன் தூது 157)

என்று கூறி பாண்டவர் அணியில் வருமாறு பாண்டவர்க்கு மூத்தவனாகிய கர்ணனைப் போய் உடன் அழைத்துவரக் கண்ணபெருமான் கேட்டுக்கொள்கிறார்.

அவ்வாறு அழைத்தாலும் கர்ணன் வரமாட்டான் என்பதும் கண்ணபெருமானுக்குத் தெரிந்தே இருக்கிறது. அதனால் தான் அனைத்தும் அறிந்திருப்பவராகிய கண்ணபெருமான் கர்ணனின் செஞ்சோற்றுக்கடன் சிறப்பையும் மிக நன்றாகவே அறிந்தவராகப் பாண்டவர் அணியில் வந்து சேர கர்ணன் நிச்சயம் மறுத்துவிடுவான் என்பதையும் தெரிந்தவராய், அந்நிலையில் கர்ணன் வர மறுத்தால் குந்தி தேவி என்ன வரம் அவனிடம் கேட்டு பெற்றுவர வேண்டும் என்பதையும் கூறுகிறார்.

"எரியமுதருந்தக் கானம் எரித்தநாள்
அகன்று போன அரவினை அங்கர்கோமான் ஆசுகமாகக் கொண்டான்
வரிசிலை விசயன்தன் மேல் மறுகணை தொடுக்காவண்ணம்
ஒருவரம் வேண்டுகென்றான் உற்றவர்க்கு உறுதி சூழ்வான்"


(கிருட்டிணன் தூது 158)

தன்னை நம்பி வாழ்பவர்களாகிய பஞ்ச பாண்டவர்களுக்கு எஞ்ஞான்றும் நன்மையே எண்ணி, நாடியதே முடிக்கும் செயல்திறமும் அருட்திறமும் வல்லவராகிய கண்ணபெருமான் குந்தி, கர்ணனிடம் கோரிப்பெறவேண்டிய வரமாகத் தெரிவிப்பது என்னவென்றால் அர்ச்சுனன் காண்டவ வனத்தை எரித்து அக்கினிபகவானுக்கு அமுதாக்கியபொழுது தப்பிப் பிழைத்த அசுவசேனன் என்ற கொடிய நாகம் கர்ணனை அடைந்து அர்ச்சுனனைக் கொல்லும் நாகாத்திரமாய் விளங்குவதால், அக்கணையை ஒரு முறைக்குமேல், அர்ச்சுனன் மேல் ஏவலாகாது என்ற ஒரு வரத்தையே கர்ணனிடம் கோரிப் பெற்று வருமாறு குந்திதேவியிடம் கோருகிறார்.

காண்டவ வனத்தை அர்ச்சுனன்



எரியூட்டுமாறு செய்தவரும் கூட கண்ணபெருமான் தான். எப்பொழுதோ நடக்கப்போகும் பாரதப் போரை முன்கூட்டியே கணித்துக் கொண்டவராகிய கண்ணபெருமான், அப்போரில் துரியோதனாதியர்களை வெல்லுவதற்காக அர்ச்சுனன் அக்கினி பகவானிடம் காண்டீபம் எனும் ஒப்பற்ற வில்லைப் பெற வேண்டுமென விரும்புகிறார். அதற்காகவே இந்திரனுக்கு உரிமையுடையதான காண்டவ வனத்தை அக்கினி பகவான் தனக்கு அவ்வனத்திலுள்ள சராசரங்களுடன் எரியூட்ட வேண்டுமென வேண்டிய போது அர்ச்சுனனை இசைய வைத்து காண்டீபம் என்னும் ஒப்பற்ற வில்லையும், கணைகளையும் அக்கினியிடம் பெற்றுத் தருகிறார். அக்கினி அக்காண்டவ வனத்தைத் தன் தீ நாக்குகளால் எரித்து உண்ணும்போது அக்காட்டின் தலைவனாகிய இந்திரன் தன் பரிவாரங்களுடன் வந்து பெரும் பேய் மழையைப் பொழிவித்துத் தீயை அணைக்க முற்படுகிறான் ஆனால் அர்ச்சுனன் அம்புகளால் சரக்கூடம் கட்டித் தன்வில்லாற்றலால் மழைநீர் நெருப்பை அணைக்க இயலாதவாறு தடுத்து விடுவதுடன், தப்பி ஓட முற்பட்ட தக்ககன் என்ற கொடிய நாகத்தின் மனைவியையும் தன் கணையால் கொன்று வீழ்த்தி விடுகிறான். இந்திரன் தன் நண்பன் ஆகிய தக்ககனின் மகன் அசுவசேனனை மட்டும் அக்கினி உண்ணாவண்ணம் காப்பாற்றி வனத்திலிருந்து வெளியேற்றி விடுகின்றான். அவ்வாறு காப்பற்றப்பட்ட அசுவசேனன் தான், தன் தாயைக் கொன்ற அர்ச்சுனனைப் பழிவாங்கும் பொருட்டு கொடிய நாகாத்திரமாகக் கர்ணனிடம் போய் தங்கி உள்ளான்.



அக்கொடிய நாகாத்திரத்தினால் அர்ச்சுனன் உயிருக்கு நேர உள்ள அபாயத்தை அறிந்திருப்பவராகிய கண்ண பெருமான், குந்தியிடம் அக்கணையை ஒரு முறைக்குமேல் ஏவாதிருக்க கர்ணனிடம் வரம்கேட்டுப் பெறவேண்டும் எனத் தெரிவிக்கின்றார்.

அப்பொழுது குந்தி, கர்ணனைத் தன் புதல்வன் எனக் கண்டு கொண்டதனால், மகிழ முடியாமல், ஏன் கண்டு கொண்டோம் என்பதாகத் துன்பமே கொள்கிறாள். தம் துன்பத்தை கண்ணனிடம் கூறிப்புலம்பவும்

## பன்னிருகை வள்ளல்

யானைக்கு ஒருகை.
மனிதருக்கு இருகைகள்.
இந்திரனுக்குக் கரங்கள் நான்கு.
விநாயகருக்கு ஐந்து.
தத்தாத்ரேயருக்கு ஆறு.
அக்கினிக்கு ஏழு.
பிரம்மனுக்கு எட்டு.
சிவபெருமானுக்குப் பத்து.
முருகப் பெருமானுக்கு பன்னிரண்டு
திருக்கரங்கள்
பன்னிரு கரங்களால் வாரி வாரி வழங்கும்
வள்ளல் முருகனே.

செய்கின்றாள்.

"கண்ணா! கர்ணன் என்பிள்ளை தான் என்பது உனக்கு முன்னமே தெரியும் அல்லவா! அப்படி தெரிந்திருந்தும் எனக்கு முன்னமே தெரிவிக்காமல் இப்பொழுது போரினை உண்டாக்கி வைத்துவிட்டு, இப்பொழுது வந்து கர்ணன் நின்மகன் என்று கூறிப் பெரிய பாரத்தை என்மீது சுமத்துகிறாயே! முன்னமே நீ எனக்கு இந்த உண்மையைத் தெரிவித்திருப்பாயானால் கர்ணனை துரியோதனனிடம் நெருங்காமல் நான் தடுத்திருப்பேனே! இப்போது நீர் கர்ணனிடம் வரம் ஒன்றும் வாங்கி வரச் சொல்லுகிறாய். அந்த வரத்தை நான் கேட்டு கர்ணனிடம் வாங்கி விட்டால் அர்ச்சுனனால் நிச்சயம் கர்ணன் மாண்டு போவான். அந்த வரத்தை நான் கேட்டு வாங்காமல் போனாலோ கர்ணன் நிச்சயம் அர்ச்சுனனைக் கொன்று விடுவான். இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான நிலையில் என்னைக் கொண்டு வந்து நிறுத்தி விட்டாயே! கண்ணா" என்று குந்தி தேவி கூறிப்புலம்புகிறாள்.

**"மன்றலந் தெரியல் வெய்யோன்**
**மதலையென் மைந்த னென்பது**
**அன்றெனக் குரைத்தாயாயின்**
**அவனுடன் அணுக வொட்டேன்**
**சென்றுயிர் ஒழிக்குமாறு செருவினை**
**விளைத்துப்பின்னை**
**இன்றெனக்கு உரைத்தாய் ஐயா என்**
**நினைத்து என் செய்தாயே!"**

**"கான்பட்ட கனலிற்பாயுங்**
**கடுங்கணை விலக்கினேனேல்**
**வான்பட்ட புரவித்தேரோன் மகன்படும்**
**மகவான்மைந்தன்**
**தான்பட்டு மடியுஞ் சென்று**
**தடாதினிஇருந்தேனாகில்**
**யான்பட்ட கொடுமை நன்று என்று**
**என்பட்டாள் இரங்கி வீழ்ந்தாள்"**
**(கிருட்டிணன் தூது 160)**

இவ்வாறாகப் புலம்பி, மயங்கி விழும் குந்திதேவியின் துயரம், கொடுந்துயரம் தான். எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு பெற்ற அந்த ஆண்மகவை, மரப்பேழைக்குள் வைத்து மானத்திற்கஞ்சி ஆற்றிலே விட்டாள். அந்தக் குழந்தை இருக்கிறதா இறந்துவிட்டதா என்பதும் தெரியாமல், துன்பத்தைப் பிறரிடம் எடுத்துக் கூறி ஆறுதல் பெறவும் முடியாத துன்பத்தில் அவள் வாடினாள்.

கண்ணபெருமான் வந்து அந்தப் பிள்ளை பிறந்ததையும், ஆற்றில் அவள் விட்டதையும் கூறியபோது, தன் மகவு உயிருடன் எங்கிருக்கிறான் என்பதை அறிந்துகொள்ளும் ஆர்வமும் குந்திக்கு ஏற்பட்டிருக்கக் கூடும். அந்தப் பிள்ளை கர்ணன்தான் என்பதை கண்ணன் எடுத்துரைக்கும்போது அவள் ஆர்வம் குறைந்து, அதிர்ச்சியே மிஞ்சுகிறது. இப்போது கண்ணன் உண்மையை உரைத்திருப்பதோ கர்ணனிடம் வாங்கி வந்தாக வேண்டிய வரத்தின் அவசியத்தைப் பொறுத்ததாய் உள்ளது. வரம் கேட்டு வாங்கிவந்தால் தலைப்பிள்ளையின் உயிருக்கு ஆபத்து. வரம் கேட்டு வாங்காமல் போனாலோ செல்லப் பிள்ளை அர்ச்சுனன் உயிருக்கு ஆபத்து, இந்நிலையில் குந்தி மனத்தடுமாற்றம் கொண்டு மயங்கிவிழாமல் என்தான் செய்வாள்?

அப்பொழுது, ஆபத்சகாயனான

## வீடு நிறைந்தபொருள்



தம்பேரக் குழந்தைகளின் அறிவை ஆயும் வகையில் பீஷ்மர் ஒருமுறை தருமனிடமும், துரியோதனிடடும் தனித்தனியே பணத்தைக் கொடுத்து "வீடு நிறைந்த பொருள் வாங்கிவையுங்கள்" என்று கூறினார்.

துரியோதனன் வைக்கோலை வாங்கித் தன்மாளிகையில் அடைத்தான். "வீடு நிறைக்க வைக்கோல் இன்னும் கொஞ்சம் வாங்க வேண்டும். காசு போதவில்லை" என்று குறைபட்டுக் கொண்டான் துரியோதனன்.

தருமனோ ஒரு சிறுவிளக்கை வாங்கிக் கூடத்தில் அதனை ஏற்றி வைத்தான்.

"இதுதான் வீடு நிறைந்த பொருள்" என்று பாராட்டினார் பீஷ்மர்.

இறைவனைச் "சோதியே சுடரே சூழொளி விளக்கே" என்று ஒளிவடிவமாகக் கண்டு போற்றுகின்றனர் அருளாளர் பெருமக்கள்.

"யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ அந்தச் சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போம்" என்பது தான் காயத்ரி மந்திரத்தின் பொருளும் ஆகும்.

கண்ணன் குந்தி தேவியைத் தேற்றுகின்றார். பஞ்சபாண்டவர்கள் ஐந்து தலைப் பாம்பினைப் போல உடல் ஐந்தும், உயிர் ஒன்றும் கொண்டவர்கள். அர்ச்சுனன் ஒருவன் இறந்தாலும் தருமர், பீமன், நகுலன், சகாதேவன் ஆகிய நால்வருமே மாண்டு போய் விடுவார்கள். ஆகவே ஐவர் ஒரு சேரமாண்டுபோவது வேண்டுமா? அல்லது கர்ணன் ஒருவன் மாண்டு போவது வேண்டுமா? அறிவோடு ஆய்ந்து பார்த்து குந்தி முடிவு காண வேண்டும் என்பதாக கண்ணபெருமான் குந்தியைத் தேற்றும் பாரதப்பாடல் வருமாறு:

***"பைவருந் தலைகள் ஐந்து படைத்த பன்னகமேபோல
ஐவரும் படுதல்நன்றோ அங்கர்கோன் படுதல் நன்றோ?
உய்வரும் சமரில் ஆவி ஒருவர்போய் உய்யார்
நைவரும் துயரம்மாறி நடப்பதே தருமம்"***

***(கிருட்டிணன் தூது 162)***

என்று கண்ணபெருமான் குந்திக்குத் தேறுதல் கூறி, விதுரரின் மனைக்குப் புறப்பட்டுப் போய்விடுகிறார்.

கண்ணபெருமான், குந்திதேவியிடம் கர்ணனின் பிறப்புண்மையை உணர்த்தி அவனிடம் கேட்டுப் பெற்று வரவேண்டிய வரம் என்னவென்பதையும் தெரிவித்து மீண்டும் விதுரரின் அரண்மனைக்கே வந்து, கண் அயர்கிறார். அத்தினாபுரி முழுவதுமே அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கும் அந்த இரவு நேரத்தில் துரியோதனன் உறங்கவில்லை. அவன் நம்பிக்கைக்குரிய அவன் கூட்டத்தார் ஒருவரும் உறங்கவில்லை. சபா மண்டபத்தில் தந்தை திருதராட்டிரன், ஆருயிர் நண்பர் கர்ணன், மாமா சகுனி மற்றும் தன்னுடன் பிறந்த சகோதரர்கள் தொண்ணூற்று ஒன்பதின்மர்களுடன் அந்த நள்ளிரவு வேளையில் கூடிச் சதி ஆலோசனை புரிகின்றான் துரியோதனன். அவர்களை ஏன் வரவழைக்க நேர்ந்தது என்பதைக் கூறுவதைப் போல் அனைவரையும் பார்த்து,

***"பாதவ வனத்திற் போன பாண்டவர் தம்மை
மீண்டுமேதக அழைத்து நாடு வேண்டுமின் என்று மூட்டும்
யாதவன் தனித்து வந்தான் என்செய்வது இயம்பும்"***

என்று வினவுகிறான்.

(தொடரும்)

***

## அட்டமா சித்திகள்

| | | |
|---|---|---|
| 1. அணிமா | - | அணுவினும் சிறிய அணுவாக விளங்கும் தன்மை |
| 2. மகிமா | - | மேருமலைபோல் உயர்ந்த வடிவுகொள்ளும் தன்மை |
| 3. இலகிமா | - | மேருமலைபோல் தோன்றினும், எடுத்தற்கு எளிதாதல். |
| 4. கரிமா | - | அணுவாய் இருப்பினும், எடுத்தற்கு அரிது ஆதல். |
| 5. பிராப்தி | - | நினைத்த அளவில் எவ்வுலகும் சென்று உலவுதல் |
| 6. பிராகாமியம் | - | கூடுவிட்டுக் கூடு பாய்தல், விரும்பிய போகம் நுகர்தல், முக்காலமும் உணர்தல். |
| 7. ஈசத்துவம் | - | இறைவனைப் போல் படைத்தல், காத்தல், அழித்தல் |
| 8. வசித்துவம் | - | தேவர் யாவரையும் வசப்படுத்துதல் |



மீன் ஒன்று சிவனை வழிபட்ட திருத்தலம் பாபநாசத்தில் இருந்து 15. கி.மீ. தொலைவில் உள்ள திருச்சேலூர் திருத்தலம் ஆகும். இக்கோயிலின் நுழைவு வாயிலில் மீன் லிங்கத்தை வழிபடும் சிற்பம் உள்ளது.



நாரை வழிபட்ட திருத்தலம் சோழநாட்டு வடகரைத் தலமான திருநாரையூர் திருத்தலமாகும்.



# கேள்வி- பதில்

குமார்-விழுப்புரம்

☆☆☆**கேள்வி :** கோட்புலி நாயனார் திருஅமுதுக்கென சேர்த்து வைத்த நெல்லைப் பஞ்சக்காலத்தில் தமக்கெனப் பயன்படுத்திக்கொண்ட தம் சுற்றத்தாரை ஆண், பெண் எனப்பாராது வெட்டி வீழ்த்திய செயல் எவ்வாறு சிவனருளுக்கு உகந்த செயல் ஆகும்? அதுவும் சோறுண்ணாது, பால் உண்ணும் பைங்குழவியையும் வாளுக்கு இரையாக்கிய கோட்புலிநாயனார்தம் செய்கை சிவனருளுக்கு உகந்த செயல் ஆகுமா? விரிவுபட விளக்கம் தருமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.



வாசகர்களின் கேள்விகளுக்குப் பதில் அளித்துள்ளார் தமிழ்ப்பெரும் பேராசிரியர் "செந்தமிழ் வாரிதி" டாக்டர் இரா. செல்வக் கணபதி அவர்கள். இவர்கள் மயிலாடுதுறை தருமை ஆதீனக் கல்லூரியின் முதல்வராக வீற்றிருந்து ஓய்வு பெற்றவர். இந்நாளில் கடல் கடந்த நாடுகள் பல சென்று சைவப் பெரும்பணி ஆற்றிவருகின்றார். இவர் நாயன்மார்கள் வரலாறுகளை விரித்து முப்பதுக்கும் மேற்பட்ட ஒலிநாடாக்கள் தாமே உரையாற்றி வெளியிட்டிருப்பது போற்றத் தக்கப் பெரும்பணி ஆகும்.

**பதில் :** "சிவன் சொத்து குலநாசம்" என்று ஒரு பழமொழி உண்டு. "அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்" என்பதும் வழக்கில் உள்ளது.

**"முன்னவனார் கோயில் பூசைகள்**
**முட்டிடின்**
**மன்னவர்க்குத் தீங்குள வாரி**
**வளங்குன்றும்"**

என்பது திருமந்திரம்.

தமிழ் நாட்டில் பல ஆலயங்களுக்கு நம் முன்னோர் அறக்கொடையாக வழங்கிய சொத்துக்கள் என்ன ஆயின?

ஆரம்பத்தில் கோயில் சொத்துக்களைக் குத்தகைக்குப் பெற்றவர்கள் பெறும்போது என்ன சொல்லிப் பெற்றிருப்பார்கள்! கேட்டபோது கோயில் சொத்தை ஒப்படைப்பேன்! உரிய விகிதத்தில் நெல் அளிப்பேன் என்றும் கூறியிருப்பார்களே! ஒப்படைத்தார்களா? நெல் அளந்தார்களா? பல ஏக்கர் நிலமுடைய கோவில்களுக்கு இன்று ஒரு வேளை பூஜைக்கே வழி இல்லாது போனது பற்றிக் கவலைப்படுவர்களுக்குக் கோட்புலியாரைப் புரிந்து கொள்ள இயலும்! அவர் செயலில் இருக்கும் நியாயம் புலப்படும்.!

கோட்புலியார் காலச் சமூகம் - சட்டங்கள் - தவறுகளுக்கான தண்டனைகளை - நிகழ்காலச் சமூகத்தில் நின்று மதிப்பிடுவது சரியாகாது.

இன்று ஒரு திருட்டைச் செய்தவனுக்கு இங்கே ஆறு மாதச் சிறை: அரபு நாடுகளில் ஒரு கையை வெட்டுதல்; போதைப் பொருள் கடத்தினால் மலேஷியாவில் மரண தண்டனை. நம் ஊரில் வெறும் சிறை. பெண்ணை மானபங்கப் படுத்தியவனைக் கல்லால் அடித்துக் கொல்லும் நாடும் இன்று உண்டு. அவனுக்கே பெண்ணைக் கட்டிவைத்து விடலாம் என்று நியாயம் பேசுபவர்களும் இங்கே உள்ளனர்.

வறுமை மிகுந்துள்ளதென வங்கிகளில் இருக்கும் பணத்தை எடுத்துக்கொள்ளலாமா? இல்லாமை காரணமாக அரசு கஜானாவில் யாரும் கை வைக்க இயலுமா?

தனி மனிதராகச் சிவாலயத்துக்கு அறக்கொடை வைத்தவர் கோட்புலியார். எந்தச் சூழலிலும் கோயில் நெல்லைப் பயன்படுத்தக் கூடாது என்று உற்றாரிடம் சத்தியம் வாங்கியவர் அவர். அதை மீறியவர்களை

அவர் தண்டித்தார். இதில் சிவனருள் குறைவு எங்கே வருகிறது?

எது எதற்காக வைக்கப் பட்டதோ, அதை அதற்காக மட்டும் பயன்படுத்த வேண்டும் என்ற



வரையறையில் இருக்கும் உண்மையைப் புரிந்து கொள்ள ஒரு மனம் வேண்டும்! அதில் நின்று பாருங்கள்; கோட்புலியாரிடம் குறை காண மாட்டீர்கள்.

ஒரு விபத்து நேர்ந்தால் தார்மீகப் பொறுப்பேற்று தொடர்புடைய அமைச்சர் பதவி துறக்க வேண்டும் என்று பேசுகிறோமே! அந்தத் தார்மிக உறவுதான் கோயில் நெல்லை உண்ட தாய்க்கும் - அவள் மார்பில் பால் குடித்த பிள்ளைக்கும் இடையே நிலவுவது.

சம்பவங்களை மட்டும் பாராது பின்புலமான மனோ பாவங்களைப் பிரித்தறிய வல்லவர்களுக்கே பெரியபுராண நியாயங்கள் புலப்படும்.

**ஆ.ஜெயலட்சுமி, வேளச்சேரி**

☆☆☆ **கேள்வி :** கண்ணப்பர் ஈசருக்குப் பன்றிக்கறி படைத்ததும், அதனையும் எச்சில் படுத்திப் படைத்ததும் சரிதானா? "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை" என மாணிக்க வாசகர் ஏன் பாடினார் என்பதைத் தெளிவுபடுத்தியருள வேண்டும்.

***பதில் :*** தத்தம் உணவுப் பழக்கத்தை ஒட்டியே மக்கள் தமக்கு விருப்பமானதை இறைவனுக்கும் படைத்து மகிழ்வர். இது கால காலமாக நிகழ்ந்து வருவது. இதில் புதுமை ஒன்றும் இல்லை. இன்றும் கூட கிராமங்களில் புகைக்கும்சுருட்டு சாராயம்-கள் இவற்றைப்படையலிடும் பழக்கம் நிலவி வருகிறது. கண்ணப்பர் பன்றியை வேட்டையாடி உண்ணும் வேடர் மரபினர். எனவே, பன்றிக் கறி படையலிட்டதில் தவறேதும் இருப்பதாகத் தெரியவல்லை.

கம்பரும், குகன் இராமரைச் சந்திக்க முதன்முதல் வந்த போது மீனும், தேனும் கொண்டு வந்ததாகக் குறிக்கிறார். அவற்றை இராமரும் முகம் சுளிக்காது 'பவித்தரம்' (புனிதமானது) என்று ஏற்கிறார்.

எச்சில் படுத்தித் தரலாமா? என்று கேட்டிருக்கிறீர்கள்.

அளவற்ற அன்பால் மற்றும் அறியாமையால் நிகழ்வன குறையாக மனிதர்களாலேயே கருதப்படுவதில்லையே! இறைவனுக்கு எச்சில் எங்கே வரப்போகிறது?

ஆற்றில் - குளத்தில் நீராடி விட்டு, அதே நீரைத்தானே அபிடேகத்திற்கு எடுத்து வருகிறோம்!

திருக்குளத்து நீரைக் கையால் எடுத்து வாயில் வைத்து பருகிவிட்டு, அதே நீரை எடுத்து வந்து நைவேத்தியம் சமைப்பதில்லையா?

கணவன் - மனைவி இடையே நிகழும் போகம் ஓர் அதீத அன்பு நிலை: அங்கே தலைவி வாயில் ஊறிய எச்சில், பாலொடு தேன் கலந்த இனிமை உடையதாகத் திருவள்ளுவர் கூறுகிறாரே!

குழந்தைகளிடம் எச்சில் என்று பேதம் பார்க்கும் அன்பான பெற்றோர் உண்டா?

சிறுத்தொண்டர், பிள்ளையை அரிய முற்படு முன் கடைசியாக முத்தம் கொடுக்க நினைக்கிறார். இது அடியாருக்குப் படையலிடப் போகும் கறியமுது அல்லவா? முத்தமிட்டால் அது எச்சிலாகி விடும் என்று எண்ணும் சிறுத்தொண்டரையும் சேக்கிழார் தாம் படைத்திருக்கிறார். அன்பில் எச்சில் என்ற பேதமெல்லாம் வருவதில்லை. சேக்கிழாரும், காளத்தி ஈசன் கண்ணப்பர் படையலிட்ட பன்றி இறைச்சியை - எச்சில் ஊனை மறையவர்கள் வேள்வியில் இடும் அவிக்கு நிகரானது என்று மகிழ்ந்து ஏற்றதாகக் குறித்துள்ளார்.

கண்ணப்பர் குறித்த மாணிக்க வாசகரின் பாராட்டு மொழிகள் பெரிதும் நியாயமும் உண்மையும் சார்ந்தன.

தமிழில் 'அன்பு' என்றும் 'ஆசை' என்றும் இரண்டு சொற்கள் உள்ளன. அன்பு உள்ளதை எல்லாம் அன்பு செய்யப்படுவாருக்கு வழங்கும் மனோ நிலை, அங்கே எதிர்பார்ப்பு என்பது சிறிதும் இல்லை. ஆசை ஒன்றைப் பெற முயல்வது. அதனால் அது இழிக்கப்பட்டது.

நாயன்மார்கள் கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி, வீடும் வேண்டா விறலில்

தலை நின்றவர்கள்.

கல்வடிவில் - குடுமித் தேவரைக் கண்ட கண்ணப்பருக்கு - அதில் ஓர் உயிர் உறைவதாகவே தெரிகிறது. இதற்குப் பசிக்குமே! இதற்கு இரவில் யார் காவல்? ஐயோ! இதன் கண்ணில் குருதியா? என்றெல்லாம் துடித்த கண்ணப்பர் அன்புக்கு



இணை வேறு இல்லை என்பது உறுதி.

காளத்தி நாதன் கண்ணில் குருதி பெருக்கெடுத்த போது சிவ கோசரியார், இது இறைவன் நிகழ்த்தும் நாடகம் என்று பார்த்திருக்கிறார். கண்ணப்பர் கலங்கித் துடிக்கிறார். முன்னது அறிவு : பின்னது அன்பு. சேக்கிழாரும்

**'நாணனும் அன்பும் முன்பு நளிர்வரை ஏற'** என்றும் **'அன்புப் பிழம்பாய்த்திரிவார்'** என்றும், **'அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பு'** என்றும் பல பதிவுகளில் இதனை ஓர் அன்பு வரலாறு என்றே இனங்காட்டுகிறார்.

பட்டினத்தார் வியந்த மூவரிலும் சிறுத்தொண்டரிடம் கொண்ட கொள்கையை நிலை நாட்டிக் கொள்ளும் விருப்பு இருந்தது. திருநீலகண்டரிடம் கொண்ட வைராக்கியத்தைக் காக்க வேண்டுமென்ற துடிப்பு நிலவியது. கண்ணப்பரிடம் இவற்றில் ஒன்றும் இல்லை.

அமரர் திரு கி. வ. ஜகந்நாதன் அவர்கள் ஒரு முறை கூறினார். பிற நாயன்மார் வரலாறு எல்லாம் கண்ணாடிக்குவளைக்குள் ஊற்றிவைக்கப் பட்ட தேன். கண்ணப்பர் வரலாறு தேனிலேயே ஒரு பாத்திரம் செய்து, அதனுள் தேனைப் பெய்து வைத்தது போன்றது. ஆகவே உள்ளும் - புறம்பும் அன்பில் நின்ற கண்ணப்பர் வரலாறு - சமய வரலாற்றில் நிகரில்லாத ஓர் அன்புப் படையல்!

அ.சுரேஷ், பவானி

☆☆☆ **கேள்வி :** "ஒருவனுக்கு ஒருத்தி" என்ற கோட்பாடு சுந்தரர் காலத்தில் இருந்ததா? அவ்வாறு இல்லாதிருந்திருப்பின் சுந்தரர் சங்கிலியாரை மணம் செய்தது எவ்வாறு குற்றம் ஆகும்? இதற்காகப் பரவையார் ஊடல் கொண்டது சரியாகுமா? பரவையாரின் ஊடலைப் போக்க இறைவரே தூது சென்றது ஏற்கத்தக்கதாகுமா? விரிவாக விளக்கம் தந்து உதவுமாறு வேண்டுகின்றேன்.

**பதில் :** "ஒருவனுக்கு ஒருத்தி' என்ற நிலைப்பாடு அண்மைக்காலம் வரை, சட்ட பூர்வமானதாக இருந்திருக்கவில்லை. 'ஒருத்திக்கு ஒருவன்' என்பது மட்டுமே எழுதப்படாத சமூகச் சட்டமாக இருந்திருக்கிறது.

சுந்தரர் வரலாறு கயிலையில் திட்டமிட்டு நிலவுலகில் நிகழ்த்தப் பட்டது என்பது பெரிய புராணத்தால் அறிய வருவது.

மனைவி ஒருத்தி இருக்க, வேறு ஒரு பெண்ணை மணக்க அக் காலத்தில் சட்ட பூர்வமான தடை இல்லை. ஆயினும் தருமம் அதை ஏற்க வில்லை. பூம்புகாரில் செய்த தவறுகளுக்குத் தண்டனை பெறாது தப்பித்த கோவலனுக்கு, மதுரையில், செய்யாத குற்றத்தைச் சுமத்தி அறம் மரண தண்டனை விதித்ததை நினைக்க வேண்டும்.

சட்ட இடுக்குகளில் நுழைந்து தப்பிப் போரை - தருமம் ஒரு நாள் தண்டித்தே தீரும் என்பது அறவிதி.

சுந்தரருக்குக் கண் பார்வை பறி போனதை நினைக்க வேண்டியுள்ளது.

பரவையாரின் ஊடல் கொள்ளும் உரிமையைத் தடுக்க நாம் யார்? அவர் பக்கத்தில் நிறையவே நியாயம் இருக்கிறது.

ஒரு பெண், தான், தன் கணவனைத் தவிர வேறு ஓர் ஆண் மகனை நினையாதிருக்கும் நிலையில், கணவனும் அவ்வாறே தன்னைத் தவிர வேறு ஒரு பெண்ணை நினையாதிருக்க வேண்டும் என்று கோர உரிமை உடையவர். திருநீல கண்ட நாயனார் வரலாற்றில் இவ்வுரிமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இன்னொருத்தியை நாடிச் சென்ற உனக்கு மீண்டும் என்னைத் தீண்ட என்ன உரிமை இருக்கிறது என்று கேட்கக் கட்டாயம் பரவையாருக்கு உரிமை உண்டு.

கண்ணன் - சகாதேவன் நட்பு; தீயவன் ஆயினும் துரியோதனன் - கர்ணன் நட்பு. சிவபெருமான் - சுந்தரர் நட்பு இவையெல்லாம் - நட்பு வரலாற்றின் உன்னதப்பதிவுகள்.



'தான் செய்த துரிசுகளுக்கு உடனாகி" நின்ற இறைவன் கருணையைச் சுந்தரர் நன்றியோடு நினைவு கூரவே செய்கிறார்.

நட்பில் இழையோடும் அன்பை - உரிமைத் தடத்தை மூன்றாமவர் புரிந்து கோடல் இயலாது. ஏயர்கோன் கலிக்காமரின் சினம் இவ்வகையைச் சார்ந்தது.

கணவன் மனைவி இடையே நிலவும் உறவைக் கூடத் திருவள்ளுவர், "மடந்தையொடு எம்மிடை நட்பு' எனப் பதிவு செய்து நட்பிலக்கணத்திற்குப் புதிய தடம் வகுக்கிறார்.

மனித உறவுகள் பலவற்றுள்ளும் அன்றும் - இன்றும் - என்றும் முதன்மை பெறுவது நட்பு ஒன்று மட்டுமே!


இறைவனை ஆண்டானாகவும் - பக்தனை அடிமையாகவும் சித்தரித்த தமிழ்ச்சமுதாயத்தில் - சிவபெருமான் - சுந்தரர் நட்பு, இறைவன் பற்றிய அச்சத்தை அகற்றியது. அன்பை விரித்தது. அவன் கருணைக்கு அளவின்மை பேசியது. ஆகவே நண்பரின் பொருட்டு இறைவன்தூது சென்ற செயலும் ஏற்புடைய செயலே ஆகும்.



நாகம் வழிபட்ட திருத்தலம் குடந்தை அருள்மிகு நாகேசுவரசுவாமி திருத்தலம் ஆகும். இது காவிரி தென்கரைத் தலம் ஆகும்.

# திருமந்திர உபதேசம்

"திருமந்திரச் செல்வர்"
திருமிகு. டி.வி. வெங்கட்ராமன் இ.ஆ.ப. (ஓய்வு)



அப்பர் பெருமான், சீர்காழியில் ஆளுடைய பிள்ளையாரைச் சந்தித்து பெருமகிழ்ச்சியடைந்து அவருடன் சிலகாலம் தங்கி, சந்தித்து பெருமகிழ்ச்சியடைந்து அவருடன் சிலகாலம் சிவபெருமான் எழுந்தருளிய பிறதலங்களையும் சென்று வணங்கும் விருப்பத்துடன் ஆளுடைய பிள்ளையாரிடம் விடைபெற்றுத் திருத்தலப்பயணம் மேற்கொள்கையில் திருச்சத்தி முற்றம் என்ற தலத்திற்கு வந்து சேர்கிறார். இறைவனை மனமுருக வேண்டிக்கொள்கிறார். "இறைவா! கூற்றுவன் வந்து என்னைக் கொண்டு போகும் முன் உனது திருவடிகளை என்மேல் கூடுபப்பொறித்துவை உனது தாள்களை என்நெஞ்சத்தில் அழியாது எழுதிவை" என்கிறார்.



"கோவாய் முடுகியடுதிறற் கூற்றங் குமைப்பதன் முன்
பூவாரடிச் சுவடென்மேற் பொறித்து வை...
இம்மையுள் உன்தாள் என்நெஞ்சத்து எழுதிவை"

(திருச்சத்திமுற்றம் - திருவிருத்தம்)

அப்பர்பெருமான் இத்திருப்பதித்தைப் பாட சிவபெருமான் அவரை நல்லூருக்கு அழைக்கின்றான். அப்பரும் நல்லூர் செல்ல, அவருடைய விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் சிவபெருமானும் அவருடைய தலையில் தனது திருவடிகளைப் பதித்து அருளுகின்றான். இப்பெரும் பேற்றினைப் பெற்ற பெருமான் மனம் உருகி கீழே வீழ்ந்து அவன் அடியார்களுக்கு இன்பம் நல்கும் தன்மையைக் கண்டு வியந்து. நல்லூர் பெருமான் தனது திருவடிகளை, நான் பயனடைய வேண்டி, தலைமேல் சூட்டினான் என்று தனது நன்றியணர்வை


"நனைந்தனைய திருவடி என் தலை மேல்
வைத்தார்
நல்லூர் எம்பெருமானார் நல்லவாறே" என்று

திருத்தாண்டகப் பாடல் ஒன்றில் குறிப்பிட்டுப் பாடுகின்றார்.






எலி வழிபட்ட திருத்தலம்
திருமறைக்காடு திருத்தலம்.




ஆமை வழிபட்ட திருத்தலம் காஞ்சி அருள்மிகு கச்சபேஸ்வரர் ஆலயம்.



சிலந்தி வழிபட்ட திருத்தலம்
திருவானைக்கா திருத்தலம்.

அப்பர் பெருமான் நல்லூரில் பெற்றது திருவடி தீக்கை. இறைவனே ஞான குரு என்கிற நிலையில் அப்பருக்கு இந்தப் பேற்றினை அளிக்கின்றான்.



வன் தொண்டராகிய சுந்தர மூர்த்தி நாயனார் பெற்ற அனுபவம் சற்றுமாறானது. சுந்தரர் திருவதிகைத்தலத்திற்கு வருகின்றார். அப்பர் பெருமான் இறைவனுடைய திருவருள் பெற்ற இடம் அது என்ற காரணத்தினால் அங்கே தங்காமல் அருகே உள்ள சித்த வட மடத்தில் தங்குகிறார். இறைவனுடைய திருத்தாள்களைப் பற்றியே சிந்தித்தவராக, உறங்கத் தொடங்குகின்றார். தனது அடியார்களுடைய விருப்பத்தை நிறைவேற்றுவது இறைவனுடைய கடமையல்லவா! இறைவன் கிழவராக அங்கே வந்து இரவிலே சுந்தரருடைய தலைமீது தனது பாதம் படும்படிக்காட்டுகின்றார். நம்பி ஆரூரர், யார் என்று தெரியாமல் கிழவரைக் கடிந்து கொள்கிறார், "இதற்கு என்னுடைய மூப்பே காரணம்" என்கிறார் இறைவர். சுந்தரர் நகர்ந்து படுக்க மீண்டும் கிழவனாருடைய பாதம்தன் தலை மீது படுதலைக் கண்ட வன்தொண்டர் கோபமாக "நீயார்" என்று கேட்கிறார். திருவதிகைப் பெருமான் "என்னை நீ இன்னும் தெரிந்து கொள்ளவில்லையே" என்று அருளி மறைகிறான். உண்மையை அறிந்து கொண்ட சுந்தரர், இறுமாப்புடன்தான் இறைவனை இகழ்ந்ததை நினைத்து வருந்தி "தம்மானை அறியாத சாதியர் உளரே" என்று திருப்பதிகம் பாடித் தன்னுடைய மறத்தலாகிய குறைபாட்டினை உணர்ந்து கொண்டவராய், எந்தக் கழல்களை மதிக்காமல் பேசினாரோ, அவற்றையே வணங்கி, துதித்து தனது மறைப்பு நீங்கியவராக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்.

சித்தவட மடத்தில் சுந்தரர் பெற்றதும் திருவடித்தீக்கையே யாகும்.

இறைவன் ஞானாசிரியனாக வந்து சீடனை ஆட்கொள்ளும்போது அளிக்கும் பல தீக்கைகளில், திருவடிதீக்கை மிக்க சிறப்புடையது.

மாணிக்கவாசகர் பெருமான் திருப்பெருந்துறையில் ஞானாசிரியனாக எழுந்தருளிய சிவபெருமானின் திருவடிதீக்கை பெற்று பேரானந்தம் அடைந்தவர். "மெய்யே உன் பொன்னடிகள் கண்டு வீடுற்றேன்" என்றும், "நிலந்தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி" என்றும் தனது உணர்வை வெளிப்படுத்துகிறார். "இணையார் திருவடி என் தலைமேல்

வைத்தலுமே

துணையான சுற்றங்கள் அத்தனையும்

துறந்தொழிந்தேன்"

என்பார்.

(திருவாசகம், திருப்பூவல்லி)

"போற்றி அருளுகநின் ஆதியாம் பாத மலர்



வண்டு வழிபட்ட திருத்தலம் திருவெண்டுறை அருள்மிகு வெண்டுறைநாதர் திருத்தலம் ஆகும். இது காவிரித் தென்கரைத் தலம் ஆகும்.

போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்குத் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால், நான் முகனுங் காணாத புண்டரிகம்.
போற்றியாம் உய்ய ஆட் கொண்டருளும் பொன் மலர்கள்
போற்றியாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய்"

(திருவாசகம் - திருவெம்பாவை)

என்றெல்லாம் திருவடிகளின் அருளிச் செயல்களைப் பற்றி நினைந்து, நினைந்து உருகுவார்.

இறைவனுடைய திருவடிகள் என்பது அருளும் ஞானமும் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளும் நிலையேயாகும். இதை ஒரு உணர்வு நிலை வெளிப்பாடு எனலாம். இந்த வெளிப்பாட்டினைத் தலையிலே பெறும் அனுபவமாகவே சான்றோர் நமக்குத் தெரிவிக்கின்றனர். இதைத் தெரிந்து கொள்ளாத மக்கள் அறிவாற்றல் என்பதை தங்களுடைய முயற்சியின் வெற்றியாகக் கருதுகின்றார்கள். சிவசத்தியே திருவருளாகும். திருவருளே சிவஞானம் உணர்வில் உதயமாவதற்குத்துணை புரிகிறது. அதற்கான இடம் தலையேயாகும். இவற்றையெல்லாம் தெரிந்து கொள்ளாதவர்கள் தாமே எல்லாவற்றையும் அறிந்திருப்பதாகக் கருதிக்கொள்வார்கள். திருமூலர் பெருமான் திருவாக்கில் இவர்களெல்லாம் 'கலதிகள்' ஆவார்கள்.

"காலும் தலையும் அறியார் கலதிகள்
கால் அந்தச் சத்தி அருள் என்பர் காரணம்
பால் ஒன்று ஞானமே பண்பார் தலைஉயிர்
கால் அந்த ஞானத்தைக்காட்ட வீடாகுமே"

(திருமந்திரம் எட்டாம் தந்திரம் - அடி தலை அறியும் திறங்கூறல்)

தலை என்பது உடல் உறுப்புகளில் ஒன்று என்று மட்டும் கருத வேண்டாம். தலை என்பது உடலின் உட்கருவிகளாகிய மனம், புத்தி சித்தம் ஆகியவற்றையும் சுட்டிக் காட்டுகிறது. அவற்றில் சித்தம் மிக முக்கியமானது. உயிரின் முதிர்ச்சி நிலையை, சித்தம் ஆகியவற்றையும் சுட்டிக் காட்டுகிறது. அவற்றில் சித்தம் மிக முக்கியமானது. உயிரின் முதிர்ச்சி நிலையை சித்தம் பிரதிபலிக்கின்றது. உயிர் இறைவனைக் கண்டுகொண்ட நேரத்தில் சித்தம், திருவருளின் தாக்கத்தைப் பெறுகிறது. சிவஞானத்தின் தன்மையை உணர்ந்து கொள்கிறது. சிவஞானம் தன்னுள் புகுந்ததைத் தெரிந்து கொண்டு, நன்றியுணர்வுடன் தன்னைச் சிவபெருமானின் திருவடிக்கீழ் அமைத்துக் கொள்கிறது. இந்தப் பேறெல்லாம் ஞானாசிரியன் சீடனுக்கு வழங்கியதேயாகும். "முதற்கண் எனது தந்தையாகிய இறைவன் என்னை நினைத்தான். நானும் அவனை நினைத்தேன். அவன் நினைத்திராவிட்டால், நான் நினைப்பதற்கான வாய்ப்பே இல்லை" என்கிறார் திருமூலர் பெருமான்.

"சிந்தையின் உள்ளே எந்தை திருவடி
சிந்தையும் எந்தை திருவடிக்கீழது
எந்தையும் என்னை அறியகிலானாயின்
எந்தையை யானும் அறியகி லேனே"

(திருமந்திரம் எட்டாம் தந்திரம் - அடிதலை அறியும் திறங் கூறல்)

- தொடரும்




குரங்கு அணில் காகம் என இம் மூன்றும் வழிபட்டதால் "குரங்கணில் முட்டம்" என வழங்கப்படும் திருத்தலம் தொண்டைநாட்டுப் பாடல் பெற்ற திருத்தலங்கள் 32 இல் ஒன்றாகத் திகழ்கின்றது.

# இன்றோ ஆடிப்பூரம்? ஆண்டாள் அவதார மகிமை

எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் உகந்து எழுந்தருளியுள்ள திருத்தலங்களுள் புராணப் பிரசத்தி பெற்றதாகவும், நூற்றியெட்டு திவ்ய தேசங்களுள் மிகவும் சிறப்பு வாய்ந்ததகாவும், ஆழ்வார்களிலே பொங்கும் பரிவோடு கண்ணபிரானிடம் ஈடுபட்டதால் 'பெரியாழ்வார்' என்று புகழப்பட்ட விஷ்ணுசித்தரும். அவர்தம் திருமகளாய், சூடிக்கொடுத்த சுடர்க்கொடியான ஸ்ரீ ஆண்டாளும் திரு அவதாரம் செய்த புண்ய க்ஷேத்திரமாகவும், விளங்குவது ஸ்ரீவில்லிபுத்தூர் திவ்ய தேசம். எனவேதான் "மின்னார் தடமதிள் சூழ் வில்லிபுத்தூர் என்று சொன்னவர் தம் பாதங்களை பணிந்து வணங்குவோம்" எனக் கொண்டாடுவர் பெரியோர்.

முன்பு பகவான் வராக அவதாரம் செய்தபொழுது தம் தேவியருடன் இங்கு தங்கி இளைப்பாறியதால் இத்தலம் வராக க்ஷேத்ரம் என்று அழைக்கப்பட்டது. இந்த க்ஷேத்திரத்தின் ஒரு பகுதியாகிய செண்பகாரண்யம் என்ற காட்டில் வில்லி, கண்டன் என இரு சகோதரர்கள் வேடுவ அரசர்களாக விளங்கினர். அவர்கள் வேட்டையாடி வரும்பொழுது தம்பியாகிய கண்டனைப் புலி ஒன்று கொன்றுவிட, இதனையறியாது வில்லி தன் தம்பியைத் தேடி அலைந்து எங்கும் காணாததால் களைப்பு மேலிட அயர்ந்து உறங்கிவிடுகிறான். அவனுடைய கனவில் பள்ளி கொண்ட பரமன் தோன்றி, கண்டனின் விருத்தாந்தங்களைக் கூறி, முன்பு தாம் காலநேமி என்கிற அசுரனை வதம் செய்வதற்காக இங்கு எழுந்தருளியதாகவும், இவ்வாலமரத்தின் அடியில் வடபத்ரசாயி என்கிற திருநாமத்துடன் விமலாக்ருதி என்கிற விமானத்தினுள் தமக்கு கோவில் கட்டி ஆராதனம் செய்து வருவாய் என அருளிச்செய்தார். வில்லியும் பரமனின் திருவுள்ளப்படி அழகிய, உயர்ந்த கோவிலை அமைத்து இவ்வூரையும் உண்டாக்கினான். புற்றாக இருந்த இவ்வூர் புதிதாக நிர்மாணிக்கப்பட்டதால் புத்தூர் என்றும், காட்டைத் திருத்தி நாடாக்கிய வில்லியின் பெயரால் வில்லிப்புத்தூர் என்றும், பின்னர் ஸ்ரீவில்லிப்புத்தூர் என்றும் அழைக்கப்படுகிறது.

பெரிய திருவடியான கருடாழ்வாரின் அம்சமாய் இத்தலத்தில் அவதரித்த பெரியாழ்வார் சிறுவயது முதற்கொண்டே பரமனிடம் ஆழ்ந்த பக்தி உடையவராய். அழகிய நந்தவனம் அமைத்து இங்கு உறையும் வட பெருங்கோயிலுடையானுக்குப் பூ மாலைக் கைங்கர்யம் செய்து வந்தார். எம்பெருமானின் நியமனப்படி மதுரையம்பதிக்குச் சென்று, வல்லபதேவ





பாண்டிய மன்னனின் அவையில் குழுமியிருந்த அனைத்து வித்வான்களும் இசைந்து ஏற்றுக் கொள்ளும்படி, "நாராயணனே பரம்பொருள்" என்று பரதத்வ நிர்ணயம் செய்தார். மன்னனும் அவரை கௌரவிக்க எண்ணி, தம் பட்டத்து யானை மேல் ஆழ்வாரை ஏற்றி, மற்ற வித்வான்கள் புடைசூழ நகர்வலமாக அழைத்து வர, எம்பெருமானும் ஸ்ரீதேவி. பூமிதேவி சமேதராய் திவ்யாயுதங்களை தரித்தவராய் கருடாரூடராய் வானிலே எழுந்தருளி ஆழ்வாருக்குக் காட்சி கொடுத்தார். இதைக்கண்ட பெரியாழ்வார். அன்பின் மிகுதியால் எம்பெருமானின் எழிலுக்குக் கண்ணேறு பட்டுவிடுமோ என அஞ்சி, அவருடைய திவ்ய மங்கள ரூபம் நிலை பெற்றிருக்கும் வகையில் பட்டத்து யானை மீது இட்டிருந்த மணிகளையே தாளமாகக் கொண்டு **"திருப்பல்லாண்டு"** பாடியருளினார். பின்னர் ஸ்ரீவில்லிப்புத்தூர் எழுந்தருளி, பாண்டியன் அரசவையில் பரிசாகப் பெற்ற பொற்கிழியைக் கொண்டு, வடபெருங்கோவிலுடையானுக்கு அரிய பல திருப்பணிகள் செய்து, உயர்ந்த கோபுரத்தையும் அமைத்தார். ஸ்ரீமத் ஸாரமான பெரியாழ்வார் திருமொழியையும் அருளிச் செய்தார்.

### ஸ்ரீ ஆண்டாள் அவதாரம்

விஷ்ணு சித்தராகிய பெரியாழ்வார் தம் நந்தவனத்தில் கைங்கர்யம் செய்து கொண்டிருக்கும்பொழுது, ஒரு துளசிச் செடியின் அடியில் - கலிபிறந்து தொண்ணூற்று எட்டாவதாக நிகழ்ந்த நள வருடத்தில் ஆடி மாதம் 8ம் தேதி சுக்லபக்ஷம், பஞ்சமிதிதி செவ்வாய்க்கிழமை கூடிய் பூர நக்ஷத்திரத்தில் பூமிப்பிராட்டியின் அம்சமாய் ஸ்ரீ ஆண்டாள் அவதரித்தாள். பெரியாழ்வாரும் அக்குழந்தைக்குக் 'கோதை' என்று திருப்பெயரிட்டு அன்போடு வளர்த்து வந்தார். கோதையும் தம் தந்தையைப் போலவே கண்ணபிரானிடம் ஆழ்ந்த அன்பு கொண்டவளாய் விளங்கினாள். நாளாக நாளாக கண்ணனிடம் கொண்ட கோதையின் பேரன்பானது பக்தி மிகுந்த காதலாகப் பரிணமித்தது. கண்ணபிரானையே மணாளனாக அடைய வேண்டும் என்றும் ஆர்வம் கொண்டாள். கோதை தம் தந்தையாகிய பெரியாழ்வார் வடபெருங்கோவிலுடையானுக்குச் சாற்றுவதற்காகத் தொடுத்து வைத்திருந்த பூமாலைகளை எடுத்து அணிந்து கொண்டு,

## உண்மையான வைணவன் எப்படி இருப்பான்?





கொக்கு போல இருப்பான்.
கோழி போல இருப்பான்.
உப்பைப் போல இருப்பான்.
அவனே உண்மையான வைணவன்.

கொக்கு "ஓடுமீன் ஓட, உறுமீன் வரும் அளவும்" காத்திருந்து பெரியமீனைப் பற்றுவது போல், நல்லாசிரியர்களை நாடி நற்பொருளைக் கற்பது உண்மையான வைணவருக்கு உள்ள இலக்கணம்.

கோழி, குப்பையை ஆய்ந்து தானிய மணிகளைத் தான் உண்டு, தன் குஞ்சுகளுக்கும், கொடுப்பது போல நல்ல நூல்களை ஆய்ந்து கற்று அதனைப் பிறருக்கும் கற்பிப்பது உண்மையான வைணவருக்கு உள்ள இலக்கணம்.

உப்பு, உணவுப் பொருளில் கரைந்திருந்து உண்பவர்களுக்குச் சுவையைக் கொடுப்பதைப் போல தொண்டிற்கே தன்னை அர்ப்பணித்து பிறருக்கென வாழ்வது உண்மையான வைணவருக்கு உள்ள இலக்கணம் ஆகும்.




அன்று ஆழ்வாரின் கனவில் எம்பெருமான் தோன்றித் தமக்குக் கோதை சூடிக்களைந்த மாலையே மிகவும் உகப்பு என அருளிச் செய்ய, அன்று முதல் கோதை **'ஆண்டாள்'** என்றும் **'சூடிக்கொடுத்த நாச்சியார்'** என்றும் அழைக்கப்பட்டாள்.

திருவாய்ப்பாடியிலே கோபியர்கள் கண்ணபிரானை அடையநோன்பு நோற்றதைப் பின்பற்றி ஆண்டாளும் வேதம் அனைத்திற்கும் வித்தாவதான **"திருப்பாவையை"** அருளிச் செய்தாள். தன் நிலையைக் கண்ணபிரானிடம் தான் கொண்ட பக்தியை உணர்த்துவதாக **"நாச்சியார் திருமொழியையும்"** அருளிச் செய்தாள்.

### ஆண்டாள் திருக்கல்யாணம்

மணப் பருவத்தினை அடைந்த ஆண்டாள் "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்று உறுதி கொண்டவளாய், திருவரங்கனையே மணாளனாகப் பெற விரும்புவதாக தம் தந்தையிடம் விண்ணப்பித்தாள். திருவரங்கத்து எம்பெருமானும் ஆழ்வாரின் கனவில் தோன்றிக் கோதையைத் தான் மணந்து கொள்வதாகவும், அவளை அழைத்துக் கொண்டு ஸ்ரீரங்கம் வருமாறும் அருளிச் செய்தார். ஆழ்வாரும் ஒரு பல்லக்கிலே

தாம் கண்ணபிரானுக்கு ஏற்ற மணப்பெண்தானா? என்று அழகு பார்க்க, இதனை அறிந்த பெரியாழ்வார், மிகவும் மனம் வருந்தியவராய் அம்மாலைகளை எம்பெருமானுக்குச் சமர்ப்பிக்காமல் இருந்தார்.



யானை வழிபட்ட தலம் திருவானைக்கா



ஸ்ரீவில்லிப்புத்தூர் க்ஷேத்திரத்திலே அழகே உருவான ஸ்ரீ ஆண்டாளுடனும், கெருடாழ்வாருடனும், கையில் செங்கோல் ஏந்தி ஸ்ரீரங்கநாதன் ரெங்கமன்னனாக, இராஜகோபாலனாக சம ஆசனத்திலே எழுந்தருளி திருக்கல்யாணக் கோலத்திலே ஸேவை சாதிக்கிறார்.

பூமிப்பிராட்டியாம் ஸ்ரீ ஆண்டாளின் திரு அவதார தினமான ஆடிப்பூர நன்னாளைக் கொண்டாடும் விதமாக ஸ்ரீ ஆண்டாள் திரு ஆடிப்பூரப் பெருவிழா, ஸ்ரீவைகானஸ பகவத் சாஸ்திர முறைப்படி துவஜாரோஹணம் (கொடியேற்றம்) தொடங்கி புஷ்பயாகம் வரை மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது. தினமும் ஆழ்வாரின் அருளிச் செயல்களான நாலாயிர திவ்ய பிரபந்த சேவாகாலமும் நடைபெறுகிறது. பக்தர்கள் அனைவரும் இத்திருவிழாவில் கலந்து கொண்டு ஸ்ரீ ஆண்டாள் ரெங்கமன்னார் திவ்ய தம்பதிகளின் அருளைப் பெற்று இன்புற்றார்கள்.

***

ஆண்டாளை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு பக்தர்குழாம் புடைசூழ திருவரங்கம் நோக்கிப் புறப்பட்டார். திருவரங்கக் காவேரியின் சமீபத்தில் பல்லக்கு அடைந்த பொழுது, அதிலிருந்த ஆண்டாள் மறைந்துவிட, பல்லக்குத் தூக்குபவர்கள் பாரம் தோன்றாமலிருக்கவே, இச்செய்தியை பெரியாழ்வாரிடம் விண்ணப்பித்தார்கள். பல்லக்கில் ஆண்டாளைக் காணாத பெரியாழ்வார் ஸ்ரீ ரங்கநாதனின் சன்னதிக்குச் சென்று மனம் வருந்திப் பிரார்த்தித்தார். எம்பெருமானும், ஆண்டாள் தமக்குத் திருவடி கைங்கர்யம் செய்து கொண்டிருப்பதைக் காட்டி அருளினார். அக்காட்சியைக் கண்ட பெரியாழ்வார் மனம் மகிழ்ந்தவராய், ஸ்ரீவில்லிப்புத்தூர் எழுந்தருளி முறைப்படி ஆண்டாளை மணம் செய்ய வேண்டும் எனப் பிரார்த்தித்தார். அவருடைய பிரார்த்தனையை ஏற்ற எம்பெருமான் பங்குனி உத்திர நன்னாளில் கருடாரூடராய், சமஸ்த தேவர்களுடன் ஸ்ரீவில்லிப்புத்தூர் எழுந்தருளி ஆண்டாளைத் திருக்கல்யாணம் செய்து கொண்டு அருளினார். இன்றும்

## தமிழக அரசின் சின்னம் :

அருள்மிகு ஸ்ரீவில்லிப்புத்தூர் வடபத்ரசயனர் சன்னிதி இராசகோபுரம் 196 அடி உயரமுள்ளதாய் விண்ணைத் தழுவி நிற்கிறது. இந்த இராசகோபுரமே தமிழக அரசின் சின்னமாக உள்ளது.

## இறைவழிபாட்டினால் மனிதன் தெய்வம் ஆகலாம்

எறும்பு முதலாக யானை வரை உயிரினங்கள் எல்லாம் பரம்பொருளை வழிபட்டு உய்வுபெற்றுள்ளன. இதனை உணராத மாந்தர்கள் மாந்தர்கள் ஆகார். அவர்களைப் பேயர் எனக் கூறுவது பொருத்தம் ஆகும்.

"எறும்புகடை யானைதலை ஈசனைப்
பூசித்துப்
பெறுங்கதி கண்டும் தேறார் பேய்கள்-அறிந்த
உலகத்தார் உண்டென்பது இல்லன்பான் வையத்து
அலகையா வைக்கப்படும்.

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் : திருமிகு ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையஆட்சித்துறை, சென்னை - 600 034.தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் : கவிஞர் டாக்டர். த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
அச்சிடுவோர் : இராயப்பேட்டை எழுதுபொருள் அச்சு மற்றும் உபபொருள்கள் உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவு சங்கம் லிமிடெட். சென்னை-14. தொலைபேசி எண் : 28485670

# TEMPLE VIEW




**Badri Medu**
**Shanthi Nagar Anx.**
**Kattupakkam.**

Rate
(Only Land Cost)
Rs. 150/-per Sq.ft.
(Only construction Cost)
Rs. 650/- per Sq.ft.

Vijay Shanthi
BUILDERS LIMITED

Call us at :
2852 2290, 2854 7554,
2852 6630

Step in at : No.3, Blackers Road, Anna Salai, Chennai - 600 002.



மாங்காடு ஸ்ரீ காமாட்சி அம்மன்
திருவருளை நாடும்

## இராம்தாஸ் பிரிண்டிங் ஒர்க்ஸ்

லெட்டர் பிரஸ், டி.ட்டி.பி.,
ஆஃப்செட், ஸ்கிரீன்,

திருக்கோயிலுக்குத் தேவையான பேரேடுகள், கட்டணச் சீட்டுப் புத்தகங்கள் மற்றும் திருவிழா அழைப்பிதழ்கள் நல்ல முறையில் குறைந்தவிலையில் அச்சடித்துத் தரப்படும்.

**போன் : 24768172**

85,இரண்டாவது முதன்மைச் சாலை, இலட்சுமி நகர், போரூர், சென்னை-600 0116.

பதிவு எண் : TN / PMG (CCR) / 707 / 03-05 / WPP No. 451 / 03-05



திசென்னை சில்க்ஸ்™

தமிழகத்தின் மாபெரும் ஜவுளி சாம்ராஜ்யம்

23, உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை - 17. ✆: 24310888

558 - 560, ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர் - 1. ✆: 2391555

74, புது மார்க்கெட் வீதி, திருப்பூர் - 4. ✆: 2242888

85- A, R.K.V. ரோடு, ஈரோடு - 1. ✆: 2213270

ISO 9001:2000

Shop online at www.thechennaisilks.com